Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-10122)

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-05 | 21 -08-2004 | சனிக்கிழமை | ஓசை -185

மட்டு. காயாங்கேணியில்

# விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்

# இரு போராளிகள் வீரச்சாவு!

## பெண் போராளி ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு காயாங்கேணி சிறிலங்கா இராணுவ முகாமிற்கு அருகே புல்லாவிச் சந்தியில் நேற்று மாலை ஆயுததாரிகள் நடத்திய கிளைமோர் மற்றும் துப்பாக்கித் தாக்குதலில் இருபோராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். மற்றுமொரு போராளி காயங்களுக்குள்ளானார்.**

விடுதலைப்புலிகளின் முன்னாள் அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளரும் தற்போது மட்டக்களப்பு பகுதியில் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வந்தவருமான பாவா மற்றும் யோகா ஆகிய இரு போராளிகளே மேற்படி தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். இச்சம்பவத்தில் காயமடைந்த பெண் போராளியொருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது வழமையான அரசியல் பணிகளுக்காக உந்துருளியில் சென்று கொண்டிருந்த போதே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. சம்பவம் இடம் பெற்ற இடத்தில் சிறிலங்காப் படையினர் தமது சோதனை நிலையமொன்றை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இவர்களுக்குத் தெரியாமல் இந்த சம்பவம் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என காயாங்கேணி மக்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் இடம்பெற்ற உடனேயே படையினரிடம் கேட்கப்பட்ட போது தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்று விட்டனர் என தெரிவித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா இராணுவ நிலைகளிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரத்தில் தாக்குதல் நடந்தது

## -சம்பவத்தை நேரில் கண்ணுற்ற குயிலின்பன் தகவல்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவ நிலைகளில் இருந்து கண்ணுக்கெட்டிய தூரத்தில் இந்தத்தாக்குதல் நடைபெற்றதாக அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் கூறியுள்ளார்.

நேற்றைய சம்பவத்தின்போது பாவாமற்றும் யோகா ஆகியோருடன் சென்ற வரானகுயிலின்பன் மேலும் தெரிவிக்கையில்,

தனக்கு முன்பாக உந்துருளியில் சென்று கொண்டிருந்த பாவா, யோகா ஆகியோர் கிளைமோர் குண்டு வெடிப்பில் உயிரிழந்ததாகவும்,ஏனையோரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகவும் கூறிய குயிலின்பன் தாக்குதலில் ஈடுபட்ட மூவரைத் தான் கண்டதாகவும், அவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தனது உந்துருளி சேதமடைந்ததாகவும் கூறியுள்ளார்.

# சனாதிபதியின் உருவப்படங்கள் யாழ்.பல்கலையிலிருந்து அகற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் உருவப்படங்களை நேற்றைய தினம் பல்கலைக்கழகத்திலிருந்து அகற்றினர்.

முற்பகல் பத்து மணியளவில் வளாகத்தில் காணப்பட்ட சனாதிபதியின் அனைத்துப் படங்களையும் மாணவர்கள் அகற்றியதோடு கூட்டம் கூட்டமாக நின்று சனாதிபதிக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர் வளாகத்தில் உள்ள சனாதிபதி சந்திரிகாவின் படங்களை அகற்றும்படி கடந்த சில தினங்களுக்கு முன்னரேயே மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# திருமணத்தின் முதல் நாள் இரவு மணமகன் வெட்டிக் கொலை

(யாழ்ப்பாணம்)

திருமணத்திற்கு முதல் நாள் மணமகன் இனம்தெரியாத இளைஞர் குழு ஒன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இளவாலைக்கும்,அளவெட்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த சு.தர்மலிங்கம் வயது (25) என்பவரே பலியாகியுள்ளார்.

மேற்படி மணமகனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த பெண் வேறு ஒருவரை காதலித்திருந்ததால் மணமகன் வீட்டாருக்கும், மணமகள் வீட்டாருக்குமிடையே ஏற்பட்டிருந்த முறுகல் நிலையை சமரசம் செய்வதற்காகவேண்டி மணமகன்

(12ஆம் பக்கம் பார்க்க)

யாழ். இல் பொலிசாரால் சித்திரவதைக்குள்ளான-

# இளைஞன் அளித்த முறைப்பாட்டை மீளப்பெறுமாறு அச்சுறுத்தல்!

(வடமராட்சி)

பொலிசாரால் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டதாக இளைஞன் ஒருவனால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து அதனை மீளப்பெறுமாறு குறித்த இளைஞன் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த சி.கஜேந்திரன் எனும் குறித்த இளைஞனது வீட்டிற்குச் சென்ற முஸ்லிம் வர்த்தகர் ஒருவரே இவ் அச்சுறுத்தலை விடுத்ததாகக் கூறப்படுகின்றது. இதையடுத்து இவ் அச்சுறுத்தல் தொடர்பாகக் குறித்த இளைஞனின் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

முல்லை.மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்று நீரில் மூழ்கி துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

**துணைப்படை வீரர்**
**லெப்ரினன்ட் திரிஸ்ராசா**
**(திலிப்பையா-திரிஸ்ராசா)**

கள்ளப்பாடு முல்லைத்தீவு என்ற துணைப்படை வீரரே சாவடைந்தவராவார்.இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# அரசியல் தெரியாத ஜே.வி.பி.யின் கருத்துக்களை ஏற்க முடியாது

## முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

கொழும்பில் இருந்து தேவையற்ற விதத்தில் கதைப்பதை விடுத்து சம்பூருக்கு போய் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் ஆயுதங்களை ஜே.வி.பியினர் கொழும்புக்கு கொண்டுவர வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண கேட்டுள்ளார்

இதனை விடுத்து ஜே.வி பி. யின் பிரசார செயலர் விமல்வீரவன்ச அரசியல் தெரியாத நிலையில் பேசி வருவது ஏற்றுக் கொள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்போதே நிதியுதவி

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கும் பட்சத்திலேயே இலங்கையின் மீள் கட்டுமாணப் பணிக்கு நிதியுதவி வழங்கப்படுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும் இலங்கை அரசாங்கமும் தமிழீழவிடுதலைப் புலிகளும் தமக்கிடையிலான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்துடன் உறுதியளிக்கப்பட்ட வகையில் விரைவாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று, அமெரிக்க பிரதிப்பாதுகாப்புச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

காணாமல் போனோர் வழக்குகளில் தொடர்புபட்ட-

# இராணுவ அதிகாரிகளைக் கைதுசெய்ய வலியுறுத்தி நீதிமன்றில் மனுத்தாக்கல்

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் 1996/97 ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களில் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்பட்ட படைஅதிகாரிகளைக் கைது செய்யக்கோரும் மனுக்களைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சார்பில் அவர்களின் சட்டத்தரணிகள் தாக்கல் செய்யவுள்ளனர்.

குறித்த காலப்பகுதிகளில் அவ்வப்பகுதிகளில் கடமையாற்றியிருந்த படை அதிகாரிகளே காணாமல்போனோர் ஆட்கொணர்வு மனுக்களில் முதல் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் வடபகுதியில் தற்போது பதவியுயர்வு வழங்கப்பட்டு கடமையாற்றி வருகின்றனர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆட்கொணர்வு மனுக்களில் இப்படை அதிகாரிகள் முதலாம் எதிரிகளாகக் குறிப்பிடப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# குளிக்கச்சென்ற இளைஞன் நீரில்மூழ்கி பரிதாப மரணம்

(வடமராட்சி)

தொண்டமனாறு கடல் நீரேரிப் பகுதியில் குளிக்கச்சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை இடம்பெற்ற இவ் விபத்தில் அணையாமூலை, புலோலியைச் சேர்ந்த மாணிக்கவாசகம் நிரஞ்சன் வயது 20 எனும் இளைஞனே உயிரிழந்தார்.

சக நண்பர் சகிதம் சந்நிதி கோவிலில் உற்சவத்திற்கு வந்திருந்த வேளையிலே அருகிலுள்ள கடல் நீரேரியில் குளிக்கையில் இவ் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. இதனிடையே உயிரிழந்தவரின் சடலம் பின்னர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையின் பிரேதஅறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி,லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டி வீதி, கிளிநொச்சி. T/P.021 2285750 (சி-10064)

### தவறிவிட்டது

மேற்படி விலாசத்தில் வசிக்கும் சின்னையா செல்வராசா 2ஆம் யூனிற் முரசு மோட்டை தே.அ.இல. 441973420V கொண்ட அடையாள அட்டையை கண்டுஎடுத்தவர் தயவு செய்து ஈழநாதம் பணிமனை புதுக்குடியிருப்பில்அல்லது கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் அல்லது நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அல்லது சி.செல்வராசா186/1 விசுவமடு மேற்கு, விசுவமடுவில் ஒப்படைக்கவும். (4977)


# வவுனியாவில் காடழிப்பு தொடர்பான முறைப்பாடுகள் தற்சமயம் அதிகரிப்பு

## வனவள அதிகாரி அலுவலகம் தகவல்

(செட்டிகுளம்)

வவுனியாவின் காடுகள் அழிக்கப்படுவதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தற்போது அதிகரித்து இருக்கும் நிலையில் நாள் ஒன்றுக்கு 600 துவிச்சக்கர வண்டி விறகுவியாபாரிகள் தொடர்ச்சியாக மரங்களை வெட்டி வருவதாக வவுனியா வனவள அதிகாரி காரியாலயம் தெரிவிக்கின்றது. இதனைத் தடுப்பது மிகவும் பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. காரணம் சிறுவிறகு வியாபாரிகள் என்று அனுமதிப்பதாகவும் தற்போது நாள் ஒன்றுக்கு 600.-800 வரையிலான துவிச்சக்கர வண்டிகள் இவ்வாறு விறகு வெட்டுவதன் மூலமாக பெருமளவான காடு அழிக்கப்படுவதாகவும் விறகு வியாபாரிகளுக்கு பச்சைமரம் தறிப்பதற்கு அனுமதிவழங்காத போதும் அவர்கள் அவ்வாறு தறித்து விறகு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# வட்டக்கச்சி பிரதேசத்தில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி காவல்துறையினரால் வட்டக்கச்சி காவல் பணிமனை நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மை நாட்களில் துரித நடவடிக்கையை மேற்கொண்ட வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பாளர் தலைமையிலான காவல்துறை அணியினர் கல்மடு நகர் - சம்புக்குளம் பகுதியில் விற்பனைக்கு தயார் நிலையில் இருந்த 6லீற்றர் கசிப்பினையும், கசிப்பு உற்பத்திக் கென வைக்கப்பட்டிருந்த 25 கிலோ சீனியினையும் சந்தேகநபர்களிடம் இருந்து மீட்டுள்ளதுடன் அதே பிரதேசத்தில் பிறிதொரு சம்பவத்தில் கசிப்பு உற்பத்தி பொருட்களான 210 லீற்றர் கொள்ளளவுடைய பரல் 1,சீனி 35 கிலோ,ஈஸ்ட் இரண்டுபைக்கற்,(தலா 2கிலோ, நிறையுடையவை) என்பனவும் சந்தேக நபர்களின் இரு துவிச்சக்கரவண்டிகள் சம்பவ இடத்தில் இருந்து காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்படுமென வட்டக்கச்சி காவல்பணிமனை பொறுப்பதிகாரி சுந்தர் தெரிவித்தார். (15)

## கலந்துரையாடல்

மன்னார் தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இதற்கு மன்னார் மாவட்ட திட்டப்பணிப்பாளர் பத்மநாதன் தலைமைவகித்தார். இதற்குரிய அனுசரணையினை தொழில் நுட்ப வழகாட்டல் நிறுவனமான வைக்றோ ஒழுங்கு செய்திருந்தது இக்கலந்துரையாடலில் 20இற்கு மேற்பட்டகட்டடஒப்பந்தக்காரர்கள் கலந்து கொண்டனர். (மி)

# தாழ்வுப்பாடு கடற்கரையில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

மன்னார் தாழ்வுப்பாடு கடற்கரைப்பகுதியில் கரையொதுங்கிய ஒரு ஆணின் சடலமொன்று மன்னார் பொலிசாரால் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது இச்சடலத்தின் இடுப்பின் கீழ் பகுதி மட்டுமே உள்ளதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பாக தெரியவருகையில் சிலமாதங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்த படகில் காணாமற் போனவர்களில் ஒருவர் என சந்தேகிக்கப்படுகின்றது. (மி)

# காளி கோயில் அருகில் சட்டவிரோத கசிப்பு விற்பனை

(தென்மராட்சி)

கொடிகாமம் வடக்கு எருவன் பகுதியில் காளிகோயிலுக்கு அருகில் கசிப்பு விற்கப்படுவதற்கு இப்பகுதி மக்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர். காலை 7.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணிவரை இப்பகுதியில் கசிப்பு விற்பனை நடைபெறுகிறது.

சிறிலங்காப் பொலிசார் மூன்று தடவைகளுக்கு மேல் கசிப்புக் காய்ச்சி விற்றுவரும் நபரைப் பிடித்து பின் விடுவித்துள்ள நிலையில் தொடர்ந்தும் தமது விற்பனையைக் குறித்த நபர் செய்து வருவதாகவும் இதை உடனே தடுத்து கட்டுப்படுத்த வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# வவுனியாவில் வரட்சிப் பகுதிகளுக்கு பௌசர் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பௌசர் மூலமாக குடிநீர் வழங்கப்படவுள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டு விட்டதாகவும் வவுனியா அரச அதிபர் கூறியுள்ளார்.

வவுனியாவில் வரட்சி காரணமாக சுமார் 15.000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நவ்வி, பாலமோட்டை, செட்டிகுளம், ஓமந்தை, பாவற்குளம் உட்பட பல பிரதேசங்களில் வரட்சி நிலவுகின்றது.

இந்தப் பகுதிகளிலுள்ள கிணறுகளில் நீர் வற்றிவிட்டது. அதிகளவு பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு - குடிநீர் பௌசர் மூலம் விநியோகிக்கப்படவுள்ளதாக அரசஅதிபர் கணேஷ் கூறியுள்ளார்.

இந்த நீர் விநியோகத்திற்கென்று அரசாங்கத்திடமிருந்து 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி கிடைத்துள்ளது என்றும் அரச அதிபர் கூறியுள்ளார்.

# புதிய நிர்வாகத் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சிவிக்சென்ரர் வலய தேசிய எழுச்சிப்பேரவை நிர்வாகத் தெரிவானது புதன், கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.நிலவன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

மேற்படி கூட்டத்தில் நிர்வாகங்களின் செயற்பாடு, அணுகுமுறை போன்றனவும் இடம் பெற்றது. அத்தோடு புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

செயலாளராக ரூபசிங்கம், உபசெயலர் க.பரராஜசிங்கம், பொருளாளர் ஆழ்வாய்ப்பிள்ளை மற்றும் உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது. இ.தருமராசா- இளையோர் செயற்பாட்டுக் குழு, இ.தாரணி மற்றும் இ.புஸ்பராணி- மகளிர் அமைப்பு, மு.இராசையா மற்றும் செ.சிவபாலன் பொது அமைப்பு, மு.தருமராசா- விளையாட்டுக் குழு போன்ற உறுப்பினர்கள்தெரிவும்,அதனைத் தொடர்ந்து கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை பொறுப்பாளர் திருமாறன், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் பொன்னுத்துரை ஆகியோர் வழங்கினார்கள். (12)

# திரைப்பட வெளியீட்டுப் பிரிவு தொடர்பகம் இன்று திறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவினரால் திரைப்பட வெளியீட்டுப் பிரிவுத் தொடர்பகம் பூநகரிப் பிரதேசத்தில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.மேற்படி திரைப்படவெளியீட்டுப் பிரிவுத் தொடர்பகம் இன்று முற்பகல் ஒரு மணிக்கு பூநகரி வாடியடிச் சந்திக்கு அருகாமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.



முல்லை மாவட்டசுகாதாரத் தொண்டர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் பிரதி மாகாணசுகாதார சேவைப்பணிப்பாளரால் மாதாந்தம் உலர் உணவு வழங்கப்பட்டுவருகின்றது.

இதில் சென்ற மாதத்திற்கான உலர் உணவு கடந்த 12ஆம்திகதி பிரதிமாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது. தொண்டர்கள் திரண்டு உலர் உணவினைப் பெற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. எதுவித வேதனமும் இல்லாமல் பணியாற்றும் இவர்கள் இவ்வுதவியாவது கிடைப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாக சுகாதார தொண்டர்கள் தெரிவித்தனர்.

(படம் -சகிலா)


# அன்பான வழமையாளர்களே!

## உங்கள் நெஞ்சங்களில் நீங்காத

இடம்பிடித்த சேரன் வாணிபம் தற்போது ஆர்ப்பிக்கோ (ARPICO) உற்பத்திப் பொருட்களான;

* ஆர்ப்பிக்கோ நீர்த்தாங்கி.
* ஆர்ப்பிக்கோ மெத்தைகள்.
* ஆர்ப்பிக்கோ கதிரைகள்.
* ஆர்ப்பிக்கோ அலுமாரிகள்.
* ஆர்ப்பிக்கோ ஸ்ரீல் மேசைகள்.
* ஆர்ப்பிக்கோ கம்பியூட்டர் கதிரைகள்.

போன்ற வீட்டு, அலுவலக தளபாட வகைகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றை எதிர்வரும் 23. 08. 2004 ஆம் திகதி இல. 349 பிரதானசாலை கிளிநொச்சியில் திறந்து வைக்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது.

-ஆர்ப்பிக்கோ (ARPICO) பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் றிச்சாட் பீரிஸ் டிஸ்ரிபூட்டேஸ் லிமிற்றட் (RICHARD PIERIS DISTRIBUTORS LTD) நிறுவனத்தின் வன்னிப்பகுதிக்கான ஒரே வழங்குனர் (SOLE DISTRIBUTOR)

# சேரன் வாணிபம்

## கிளிநொச்சி

4971

# அமெரிக்கப்படை என்னைப் பிடிக்க முயன்றால்
# எண்ணெய் வயல்களுக்குத் தீ வைத்துசாவேன்

## ஷியா முஸ்லிம்களின் தலைவர் அல்-சதார் மிரட்டல்



(நஜாப்)

**அமெரிக்கப்படை என்னைப் பிடிக்க முயன்றால் எண்ணெய் வயல்களுக்குத் தீவைத்து விட்டுச்சாவேன் என்று ஈராக் தீவிரவாதிகளின் தலைவர் அல்-சதார் மிரட்டல் விடுத்துள்ளார்.**

ஈராக்கில் சதாம் ஹூசைன் ஆட்சியை அமெரிக்கா வீழ்த்தி விட்டாலும் அங்குள்ள குட்டி குட்டி பிராந்தியத் தலைவர்களை இன்னும் வீழ்த்த முடியவில்லை. அந்த குட்டித் தலைவர்களில் ஒருவர் தான் அல்சதார். இவர் ஷியா முஸ்லிம்களின் ஒரே தலைவர் ஆவார்.

நபிகள் நாயகத்தின் பேரரான புனித இமாம் அலியின் நினைவிடம் அமைந்திருக்கும் நஜாப் நகரில் இவர் படையுடன் வசிக்கின்றார். இவரது தலைமையிலான மெகதி என்ற ஷியாப் படைப் பிரிவினர் அமெரிக்கப் படைக்கும் புதிய ஈராக் அரசுக்கும் பெரும் தலைவலியாகவுள்ளனர். இந்த நிலையில் அல் சதாரையும் அவரது படையையும் அதிரடியாக வீழ்த்த அமெரிக்கா 2ஆயிரம் படைவீரர்களை நஜாப் நகரில் குவித்துள்ளது. அல்சதார் இமாம் அலியின் நினைவிடத்தில் பதுங்கியிருப்பதால் அந்த நினைவிடத்திற்குள் அதிரடியாக நுழைந்து அவரைப் பிடிக்க ஈராக் அரசுப் படைகள் தயாராகி வருகின்றன.

நேற்று முன்தினம் மெகதி படைப் பிரிவினர் மீது அமெரிக்க உலங்கு வானூர்திகள் குண்டு வீசித் தாக்கின. அதில் 12 பேர் பலியாகியும் 14பேர் காயமடைந்தும் உள்ளனர். இதற்கிடையே அல்சதாருடன் ஈராக் அரசுப் படையினர் இரகசியப் பேச்சு நடத்தினர். அதன் படி இமாம் அலி நினைவிடத்தை விட்டு வெளியேறவும் ஆயுதங்களைக் கைவிட்டு மெகதி இராணுவத்தைக் கலைக்கத் தயார் என்று சதார் தரப்பினர் ஒப்புக் கொண்டனர். இதனால் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்ததாக ஈராக் மற்றும் அமெரிக்காவிற்கு நிம்மதி ஏற்பட்டது. ஆனால் அல்சதார் அவரது முடிவை நேற்றுத் திடீரென மாற்றிக்கொண்டார். புனித இமாம் அலி நினைவிடத்தை விட்டு வெளியேற மாட்டேன். நானும் எனது படையினரும் தியாகிகளாகச் சாவோம் என்று அல்சதார் அறிவித்துள்ளார். இதனால் நஜாப் நகரில் பெரும் போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

நஜாப் நகரின் மையப் பகுதியில் நேற்று கடும் சண்டை நடந் தது. அங்குள்ள காவல் நிலையம் மீது மெகதிப் படைப்பிரிவினர் மோட்டர் பீரங்கிகள் மூலம் குண்டு மழை பொழிந்தனர். அதில் ஈராக் பொலிசார் 7 பேர் பலியாகி 31பேர் காயமடைந்தார்கள்.

நஜாப் நகரில் அல் சதாரின் படையைச் சேர்ந்த நீண்ட தூரம் குறி தவறாமல் சுடும் ஸ்னிப்பர் துப்பாக்கி வீரர்கள் நேற்று சரமாரியாக பல மணி நேரம் தொடர்ந்து சுட்டனர். இதனால் அந்த பகுதி புகைக்காடாகக் காட்சி அளித்தது. அல்அராபியா தொலைக்காட்சி அதை நேரடியாக ஒளிபரப்புச் செய்தது.

இந்த துப்பாக்கிச் சண்டையை கவசமாகப் பயன்படுத்தி அல்சதார் இமாம் அலியின் நினைவிடத்தை விட்டுத் தப்பியோடிவிட்டதாக ஈராக்கில் நேற்று வதந்தி பரவியது. ஆனால் அது உண்மைதானா? என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. இதனிடையே ஈராக்கில் உள்ள எண்ணெய் வயல்களுக்குத் தீவைத்து விட்டு சாகப் போவதாக சதாரும் அவரது ஆதரவாளர்களும் நேற்று மிரட்டல் விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இமாம் அலி நினைவிடத்தின் மீது ஈராக் படையினர் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்க டாங்கிகளும் இந்தப் போரில் குதிக்கத் தயாராக உள்ளனர். அல் சதாரை வளைத்துப் பிடிக்க அவர்கள் தயாராகி வருகின்றார்கள்.

---

**4ஆயிரம் ஊழல் அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு ஓட்டம்**

(பெய்ஜிங்)

சீனாவில் கடந்த 20 ஆண்டுகளில்4ஆயிரம் அதிகாரிகள் ஊழல்செய்து அதன் மூலம் கிடைத்த 3ஆயிரம் கோடிரூபாய் பணத்துடன் வெளிநாடுகளுக்கு தப்பியோடிவிட்டனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

---



ஈராக் அபுகிராய்ப் சிறையில் தடுத்துவைக்கப்பட்டு விடுதலையாகிய கைதி ஒருவர் தனது சகோ[illegible]ரனை பாய்ந்து கட்டிப்பிடிப்பதையும் அமெரிக்கப்படை வீரர் சம[illegible]களை காட்டுவதையும் காணலாம்.

## 11 ஆப்கான் தீவிரவாதிகள் கூட்டணிப்படையினரால் கைது!

(காபூல்)


ஆப்கானிஸ்தானில் 11 தீவிரவாதிகள் ஆப்கான் மற்றும் அமெரிக்க கூட்டுப்படையினரிடம் பிடிப்பட்டனர். அவர்களில் 2பேர் காயமடைந்தனர். அவர்களிடம் இருந்த ஆயுதங்களையும் கூட்டுப் படையினர் கைப்பற்றினர். இந்தச் சம்பவம் குனார் மாநிலத்தில் நங்கலம் என்ற இடத்தில், தீவிரவாதிகளும், இராணுவத்துக்கும் இடையே சண்டை நடந்தது 4.00 மணிநேரம் இந்தச் சண்டை நடந்தது. கடந்த மூன்று மாதங்களில் 120 தலிபான் தீவிரவாதிகளை அமெரிக்க இராணுவம் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## இராணுவம் வெளியேறாவிட்டால் “பிரேஞ்சு நிருபரைக் கொல்வோம்”

### ஈராக் தீவிரவாதிகள் மிரட்டல்

(பாக்தாத்)

ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் புனித நகரான நஜாப்பில் இருந்த அமெரிக்க இராணுவம் வெளியேறாவிட்டால் பணயக் கைதியாகப் பிடித்து வைத்திருக்கும் பிரெஞ்சு நிருபரைக் கொன்று விடுவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர்.



சியா முஸ்லிம்களின் புனித நகரான நஜாப் நகரில் மேலும் அமெரிக்கப்படைகள் தாக்குதல் நடத்தினால் ஈரானின் இரண்டாவது பெரிய எண்ணெய் உற்பத்தி நகரமான பாஸ்ராமீது தாக்குதல் நடத்துவோமென மக்டடா அல் சதார் மதத்தலைவர் அறிக்கை விட்டிருக்கும் நிலையில் எண்ணெய் உற்பத்தி தலைமைக் காரியாலயமருகே நடந்து செல்லும் ஈராக்கியர் ஒருவர்.

36 வயதான நிருபர் மிகா கரேன் அவரது ஈராக்கிய மொழி பெயர்ப்பாளருடன் நசிரியா நகரில் ஒரு கடையில் இருந்து கடந்த 13 ஆம் திகதி தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். தொல்பொருள் குறித்து டாகுமெண்டரி படம் எடுத்துவரும் கரேன் ஈராக்கில் கலைப் பொருட்கள் கொள்ளை அடிக்கப் படுவது குறித்து விசாரணை மேற்கொண்டபோது கடந்தப்பட்டார். அல்ஜசீரா தொலைக் காட்சி, ஒருவீடியோ ஒளிநாடாவை ஒளிபரப்பியது. அதில் முகமூடி அணிந்த ஆயுதம் தாங்கிய 5 தீவிரவாதிகள் முன்னால், பிரேஞ்சு நிருபர் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தார். தீவிரவாதிகள் நாங்கள் தியாகப் படையை (மார்ட்டியர்ஸ் பிரிகேட்) சேர்ந்தவர்கள்' என்று கூறிக்கொண்டனர். 48 மணி நேரத்திற்குள் நஜாப் நகரில் இருந்து அமெரிக்கஇராணுவம் வெளியேறவேண்டும் இல்லாவிட்டால் பணயக் கைதியைக் கொன்றுவிடுவோம் என்று 'மிரட்டினர்.



நேபாளத்தில் காத்மண்டுவின் மாவோயிஸ்ட் கிளர்ச்சி வாதிகளால் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட இடத்தை அவதானிக்கும் பொலிசாரும் வாகனம் ஒன்றை சோதனையிடும் இராணுவத்தினரும்.

## எல்சல்வடோரில் கைதிகளிடையே கைகலப்பு
## 31 கைதிகள் பலி; 24 பேர் படுகாயம்

(சன்சல்வடோர்)

நஜாப் நகரில் தீவிரவாதிகளுக்கும், அமெரிக்க இராணுவத்திற்கும் இடையே கடுமையான சண்டை நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.மத்திய அமெரிக்காவில் உள்ள எல்சல்வடோர் நாட்டில் சன்சல்வடோர் நகரில் உள்ள சிறையில் கைதிகளிடையே ஏற்பட்ட மோதலில் 31 கைதிகள் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 800 பேரை அடைக்கக்கூடிய சிறையில் 3 ஆயிரம் பேர் அடைக்கப்பட்டு இருந்தனர். சிறைக்காவலர்கள் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்து கலவரத்தை அடக்க முயன்றனர். சிறையில் கைதிகள் இந்தக் கலவரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தப்பி ஓடிவிடக் கூடாது என்பதற்காக சிறையைச் சுற்றிலும் பொலிசார் பாதுகாப்பிற்காக நிறுத்தப் பட்டனர். சிறைக்குச் செல்லும் வீதி மூடப்பட்டது. சிறை வளாகத்தின் மீது ஹெலிகொப்டரில் வட்டமிட்டபடி பொலிசார் கண்காணித்தனர்.10கைதிகள் ஒன்று சேர்ந்து ஒரு கைதியை அடித்துக் கொன்றதைத் தொடர்ந்து கலவரம் ஏற்பட்டது.

---

## பொலீஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்
## நஜாப்பில் ஏழு பொலீசார் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் புனித நகரமாகக் கருதப்படும் நஜாப் நகரில் ஷியாப் பிரிவுத் தீவிரவாதிகள் நேற்று முன் தினம் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தியதில் ஏழு பொலி சார் உயிரிழந்துள்ளனர் ,21 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் சதாம்ஹூசைன் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் அங்குள்ள தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப் படையினருக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வரு கின்றன.

இந் நிலையில் நபிகள் நாயகத்தின் மருமகள் இமாம் அலி அடக்கம் செய்யப்பட்ட இடம் நஜாப் நகர் புனித நகரமாக கருதப் படுகின்றது. இந்நகரில் ஷியாப் பிரிவு முஸ்லிம்கள் ஏராளமாக வசி த்து வருகின்றனர் சதாம் ஹூசை னின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் அமெரிக்கா அங்கு நிலை கொண் டிருப்பதை கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

தற்போது ஷியா முஸ்லிம்கள் ஆயுதமேந்தியும் போராட ஆரம் பித்துள்ளனர்.நேற்று முன்தினம் காவல்நிலையம் மீது இவர்கள் தாக்குதல் நடத்தியதில் ஏழு பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர்.


இதனையடுத்து ஷியா முஸ்லிம் போராளிகளுக்கும் அமெரிக்கப்படையினருக்குமிடையே பல மணிநேரம் சண்டை நீடித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையில்

# விசேட கண் சத்திர சிகிச்சை முகாம் மூலம் பெருமளவான நோயாளர்கள் பயனடைவு

(அலுவலக செய்தியாளர்)

**யாழ்.போதனாமருத்துவமனையில் சேவையாற்றும் கண்சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கு இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் கண்சத்திரசிகிச்சை குழுவினர்களும் இணைந்து நடாத்தும் கண்சத்திரசிகிச்சை முகாம் விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரின் ஒழுங்கமைப்புடன் டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இடம் பெற்று வருகிறது.**



ஒரே தடவையில் 120 இற்கும் மேற்பட்டவர்களுக்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கற்றாக் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கற்றாக் சத்திரசிகிச்சைக்கு பல மைல்கள் தூரம் பிரயாணம் செய்ய வேண்டியநிலை உள்ளது. அதாவது யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் மட்டுமே இசத்திர சிகிச்சை செய்யக் கூடியதாக இருந்தது.ஆனால் இம்முறைபெருந்தொகையான மக்கள் கற்றாக் சத்திர சிகிச்சையை எம் மண்ணில் பெறமுடிந்துள்ளது.

தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை நிலையங்களில் கற்றாக் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியவர்கள் தேர்வு செய்யப்பட்டு அதனூடான ஒருங்கிணைப்புடன் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கண் சிகிச்சை முகாம் நடைபெறுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் பல உதவிகள் வழங்கியுள்ளனர்.எம் மக்களின் நன்மை கருதி தொடர்ந்தும் இது



போன்ற கண்சிகிச்சை முகாம்களை ஒழுங்குசெய்ய எண்ணியுள்ளனர். (தீ,ச)

# மிதிவெடி எச்சரிக்கைப் பலகைகளை அகற்றும் விஷமிகளின் செயற்பாடு

(வடமராட்சி கிழக்கு)

இந்த மாதம் 3ஆம்திகதி அன்று வெண்புறா நிறுவனத்தினரால் முகமாலை தொடக்கம் கிளிநொச்சி வரையும், புதுக்காடு-தாளையடி-உடுத்துறை வரையும் புதிதாக நாட்டப்பட்ட எச்சரிக்கைப் பலகைகளில் தர்மக்கேணிப் பகுதிகளில் மூன்று பலகைகள் சில விஷமிகளினால் அகற்றப்படுவதற்கு தயாரான நிலையில் விழுத்தப்பட்டுள்ளன. இப்பகுதியில் முதல் நாட்டப்பட்ட எச்சரிக்கைப் பலகைகளும் சில விஷமிகளால் திருடப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இராணுவத்தினர் நிலை கொண்ட பகுதிகளில் பலவகையான வெடிபொருட்கள் இருப்ப தனால் அது சம்பந்தமான விழிப்புணர்வை ஊட்டும் வகையில் வெண்புறா நிறுவத்தினரால் பல எச்சரிக்கைப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.சில விஷமிகள் தமது கைவரிசையினைக் காட்டி வருகின்றனர். இதை அகற்றி அதிலிருக்கும் இரும்புப்பைப்பை ஒருவர் எடுப்பதனால் பல பொது மக்கள் கண்ணிவெடி, மிதிவெடி போன்ற பொருட்களில் தமது அவயவங்களையும், உயிரையும் இழக்கும் நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

# கழிவுகள் கொட்டப்படுவதை எதிர்த்து சூடுவந்தபுலவு மக்கள் ஆர்ப்பாட்டம்

(செட்டிகுளம்)

வவுனியா நகரசபையால் சூடுவந்தபுலவு பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதை எதிர்த்து இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.பாரதிபுரத்திற்கும் சூடுவந்தபுலவுக்கும் இடையில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் நோய்கள் தொற்றும் அபாயம் இருப்பதாகவும் விவசாயம் பாதிப்புக்குள்ளாவதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நகரசபை செயலாளரிடம் கேட்ட போது தமக்கு வவுனியா பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்ட காணியிலேயே கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதாகவும், அவ்வாறு கொட்டப்படும் கழிவுப் பொருட்கள் சுழற்சி முறையில் தீயிடப்படுவதாகவும் தெரிவித்தார். (21)

## விளையாட்டு பொருட்கள் வழங்கல்

(அக்கராயன்)

கண்ணகைபுரம் மேற்கு முட்கொம்பன் பிரதேசத்தில் 150 வீட்டுத்திட்டக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள சங்கர் விளையாட்டுக் கழகத்திற்கு அக்கராயன் பிரதேச அரசியல் துறையினரும், அக்கராயன் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து கரப்பந்து விளையாட்டுப் பொருட்தொகுதி ஒன்றினை வழங்கியுள்ளனர். இதனால், இவ்விளையாட்டுக் கழகத்தினர் பயனடைந்துள்ளனர். (15)

# பட்டப்பகலில் நகை திருடியவர்களில் ஒருவர் அயலவர்களால் பிடிக்கப்பட்டார்

மன்னார் வயல் வீதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த புதன் கிழமை இருவர் பட்டப் பகலில் 40பவுண் நகைகளை திருடியுள்ளனர்.

திருட்டுநடந்த சமயம் அயலவர்களின் உதவியுடன் இரு திருடர்களில் ஒருவர் அகப்பட்டுக் கொண்டார். மற்றவர் தப்பி ஓடிவிட்டார். இந்த இருவரும் கற்பிட்டியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. பிடிக்கப்பட்டவர் மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.அவர் நேற்று முன் தினம் மன்னார் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு தற்சமயம் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (மி)

# முன்பள்ளி கல்விமேம்பாட்டுப் பிரிவினரின் பிரதேச ரீதியான ஆக்கப்பொருட்கண்காட்சி

(அலுவலகசெய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் முள்பள்ளி கல்வி மேம்பாட்டுப் பிரிவினரால் நடாத்தப்படும் முன்பள்ளிகளின் பிரதேச ரீதியிலான ஆக்கப்பொருட் கண்காட்சி நேற்றுமுன்தினம் பளை பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.



பளைப்பிரதேசத்தில் இயங்கி வருகின்ற 19 முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து 382 முன்பள்ளிச் சிறார்களினது கைவண்ணங்களில் உருவமைக்கப்பட்ட ஆக்கப் பொருட்கள் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. சிறிலங்கா இராணுவத்தினரின் படையெடுப்பினால் இடம்பெயாந்து மீளக் குடியேறிவரும் பகுதியாகிய பளை பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அடிப்படைவசதிகள் உட்பட எந்தவொரு வசதிகளுமற்ற நிலையில் தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்ற இப் பிரதேச முன்பள்ளிச் சிறார்கள் மேற்படி கண்காட்சி நிகழ்வில் ஆர்வத்துடனும் உட்சாகத்துடனும் கலந்து கொண்டமை சிறப்புமிக்கதொன்றே.



இக்கண் காட்சியில் முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் ஆக்கங்களாலும் பெரும் முயற்சியினாலும் உருவாக்கம் பெற்றவிளையாட்டு உபகரணங்கள், சிறுவர்கற்றல் உப்கரணங்கள், மாதிரிக் கடற்கரை, மாதிரிக் காடுகள் என்பன வற்றோடு சிறிலங்கா இராணுவத்தினாரால் தமிழின அழிப்பிற்காக தமிழர் தாயகப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கின்ற கண்ணிவெடி மிதிவெடி ஆகியவற்றின் புகைப் படங்களும் பார்வைக்குவைக்கப் பட்டிருந்தன.முன்தாக காலை 9.30 மணியளவில் பளைபச்சிளைப் பள்ளி பிரதேச சமூகஅபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் ஆரம்பமான இந்நிகழ்வின் மங்கல விளக்கினை பச்சிலைப பள்ளிப் பிரதேச செயலக ஆளணி உத்தியோகத்தர் சுவாமி நாதன் அவர்களும், பளைப் பிரதேச காவல்துறை பொறுப்பாளர் மகேந்திரகுமார் அவர்களும் பளைகோட்டக் கல்விப்பணிப்பாளர் இராமலிங்கம் அவர்களும் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை பச்சிலைப்பள்ளி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வின்சன் அவர்கள ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழர் புனர் வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர்புனர் வாழ்வுக்கழக நிர்வாக இணைப்பாளர் ஜெராட் அவர்களும் முன்பள்ளிகல்வி மேம்பாட்டுக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் யோ.நிலா அவர்களும் பச்சிலைப் பள்ளி புனாவாழ்வுக் கழக்கொடியை பச்சிளைப்பள்ளி புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இளங்கோ அவர்களும் ஏற்றிவைததனர் இந்நிகழ்வுகளுக்கு கிளி. முழங்காவில் அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலை அதிபரும் பளைப பிரதேச முன்பள்ளிக் கட்டமைப்பு தலைவருமான வ.ஜீவரத்தினம் அவர்கள் தலைமைதாங்கினார். இக் கண்காட்சி நிகழ்வினை அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவன பணியாளர்கள், போராளிகள் பொது மக்கள் எனப்பெருமளவானோர் அணியாக வந்து பார்வையிட்டனர்.(ச,தீ)

# முல்லை நுண்கலைக் கல்லூரியின் மாதாந்த தமிழிசை விருந்து

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியினரால் நடாத்தப்படும் மாதாந்த தமிழிசை விருந்து வரிசையில் ஆவணிமாத தமிழிசை விருந்து இன்று நடைபெறவுள்ளது. புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் இசைக்கலைமணி ஆறுமுகம் ஜனார்த்தனி அவர்களின் பாடலும்,யாழ் கல்வித திணைக்கள முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாள் சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்களின்பாடலும் இடம் பெறவுள்ளதோடு, இன்னும்பல இசை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

# வவு.மாவட்டத்தில் மரங்கள் தறிக்கப்படுவது பற்றி முறைப்பாடு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் அதிகளவாக மரங்கள் தறிக்கப் பட்டுக் கொணடிருப்பதாகவும் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு பல முறைப்பாடுகள் தமக்கு வந்த வண்ணம் இருப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர். இது சம்பந்தமாக சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கமுடியாத போதும் சமரசம் செய்யும் நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக தாம் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. வவுனியா மாவட்டத்தில அதிகளவான மரங்கள் அழிப்பது தொடர்பாகவும், பலகைகளாக்கி தென்பதிக்கு கொண்டு செல்வது தொடர்பாகவும் வவுனியா பொலிசாரும் நீதிமன்றமும் சில நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர். எனினும் சில நபர்கள் தொடர்ச்சியாக மரத்தினைத் தறித்து கடத்திச் செல்லும் நடவடிக்கையில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். இந்தச்சம்பவம் தொடர்பாக சில அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## விவசாய விழா

மன்னார் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்றுவரும் 12 விவசாய கேந்திர நிலையங்களில் விவசாய விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் காலையில் மன்னாரில் மரதன் ஓட்டப்போட்டியும் துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டியும் இடம்பெற்றது. இப்போட்டிகள் யாவும் முருங்கன் சந்தியிலிருந்து ஆரம்பமாகி மன்னார் பொது நூல்நிலையத்திற்கு முன்னால் முடிவுபெற்றது. (மி)

# ஆண்,பெண்களுக்கான சமத்துவப் பயிற்சி வகுப்பு

ஆண்,பெண்களுக்கான சமத் துவ (பால்சமத்துவ) பயிற்சி வகுப்பு கிளி நொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. யூ.என்.எச்.சீ.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி. முல்லை அனைத்து சுகாதாரத் திணைக் களத்தினருக்கும் சுகாதாரத் தொண்டர் களுக்கும் எதிவரும்23, 24, 25 ஆகிய மூன்று தினங்களும்நடைபெறவுள்ளதாக முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி.ஜெயக் குலராஜா தெரிவித்தார். (20)

# தகவல் தொழில்நுட்பத்துறையை விருத்தி செய்ய உலகவங்கி உதவி

யாழ்.பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில் நுட்பத் துறைக்கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான தகவல் தொழில் நுட்பக்கல்வியை நவீன மயப்படுத்துவதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்க முன் வந்துள்ள உலக வங்கி இதற்கென 15இலட்சம் ரூபா'வை ஒதுக்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

"பல்கலைகழகங்களின் அடிப்படைத்தரத்தை விருத்தி செய்தல்" என்ற திட்டத்தின்கீழ் இந்நிதியை உலக வங்கி ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(33)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயிகளை அச்சுறுத்தும் மிதிவெடிகள்

தென்மராட்சிப் பகுதிகளில் விவசாயச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் உயிர்களுக்கு சிறிலங்கா படையினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் பாரிய அச்சுறுத்தலாக உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எழுதுமட்டுவாள்,மட்டுவில் வடக்கு, தனங்கிழப்பு, மறவன் புலோ பகுதிகளில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு விரும்பும் விவசாயிகளே இந்த அச்சத்தை தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களே இன்று வெடிபொருட்களின் அச்சுறுத்தலை விடுக்கும் இடமாக மாறி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.இவற்றை உடனே அகற்றிவிட நடவடிக்கை எடுக்கும்படி விவசாயிகள் கோருகின்றனர். (28)

# வடபிராந்திய போ.ச.ஊழியர் 250 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்.மாவட்டத்தில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்கள் 250 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

வடபிராந்திய போக்குவரத்துச்சபையில் ஏற்பட்டிருந்த ஆளணிப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக வேண்டி தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்த 250 பேருக்கே இவ்வாறு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்கான உறுதிமொழியை மத்தி போக்குவரத்துச்சபை அதிகாரிகள் தமக்கு வழங்கியிருப்பதாகவும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி தெரிவித்தார். (33)

# தென்மராட்சிக் கோட்ட தே.எ.பேராளர் சங்கமம்


தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச ஊரக பேராளர்களுக்கான சங்கம நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற இருக்கிறது.

இந்த நிகழ்வில் அனைத்துப் பேராளர்களையும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி தென்மராட்சி கோட்டதேசிய எழுச்சி பேரவையின் தலைமை அலுவலகம் தெரிவிக்கிறது. (28)

# திரைப்படக் காட்சியும் விமர்சனக் கலந்துரையாடலும்

'நல்ல சினிமா ஊடாக இன்னுமோர் உலகம்' எனும் மகுடத்தின் கீழ் கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் கீழ் இயங்கும் திரைப்பட வட்டத்தினால் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சங்க மண்டபத்தில் தமிழீழ திரைப்பட இயக்குநர் ஞானரதனின் இயக்கத்தில் உருவான 'புயல்புகுந்த பூக்கள்' தென்னிந்தியத் திரைப்பட நடிகை ரேவதியின் இயக்கத்தில் உருவான 'மித்ர மை பிரெண்ட் (MITHRA MYFRIEND ) ஆகிய திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. திரைப்படங்களின் முடிவில் நிகழும் விமர்சனக் கலந்துரையாடலில் திரைப்பட இயக்குநர் ஞானரதன் பங்கேற்கவுள்ளார். கலந்துரையாடலை எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் வழி நடத்தவுள்ளார். திரைப்பட இரைசனையாளர் அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு திரைப்பட வட்டத்தினர் வேண்டுகின்றனர்.

# கட்டுமானம் முடிவுறும் நிலையில் மருதங்கேணி மருத்துவமனை



(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தாளையடிப் பிரதேசத்தில் 170 இலட்சம் ரூபா செலவில் பொது மருத்துவமனை அமைக்கப் பெற்று கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் படையெடுப்பினாலும் விமானக் குண்டு வீச்சுக்களினாலும் முற்றாக அழிக்கப்பட்ட இப்பொது மருத்துவமனை யாழ்ப்பாண அரசஅதிபரின் ஆதரவோடு நிகொட் நிறுவனத்தினரால் 170 இலட்சம் ரூபா செலவில் புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகப்பேற்று விடுதி, பெண்களுக்கான விடுதி ஒன்று, ஆண்களுக்கான விடுதி ஒன்று என்பனவற்றோடு வெளிநோயாளர்கள் பகுதியையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள இம்மருத்துவமனை மீளக் குடியமர்ந்து வரும் இப்பிரதேச மக்களின் மருத்துவத் தேவைகளை பெரிதும் பூர்த்தி செய்யக்கூடியதாக அமையுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். அத்தோடு மிக விரைவாகத் திறக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்படுமானால் அப்பகுதி மக்களுக்கு பெரிதும் பயனுடையதாக அமையுமெனவும் மக்கள் கருதுகின்றனர்.(ச,தீ)

## - இராணுவ ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட -

# பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பெண்கள் பண்பாட்டு மையம் நடவடிக்கை

**யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களை இனம் கண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்கத் தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

இதனடிப்படையில் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம் என யாழ். மாவட்டத்தை 5 வலயங்களாகப் பிரித்து அவற்றில் வாழும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களை இனம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான அடிப்படைப் புனர்வாழ்வு உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ள தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையத் தலைவியும், பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி பத்மினி சிதம்பரநாதன், இத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களின் கல்வி பொருளாதாரம், தொழிற் பயிற்சி போன்ற சமூக நல உதவித்திட்டங்கள் மேம்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (33)

## -தென்மராட்சி கல்வயல் பகுதியில்-

# மது வெறியில் நின்ற இளைஞர்குழு மருத்துவ நிலையத்தை சேதப்படுத்தியது

(தென்மராட்சி)

மது வெறியில் வந்த இளைஞர் குழுவினால் மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்று உடைத்து நொருக்கப்பட்டது. சில தினங்களுக்கு முன் தென்மராட்சி-மட்டுவில் கிழக்கில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

சுமார் 18 வயதிலிருந்து 25 வயது வரையான இளைஞர்கள் கொண்ட இக்குழு சம்பவ தினம் இரவு எட்டு மணி தொடக்கம் பதினொரு மணிவரை மிதமிஞ்சிய மது போதையில் நின்று வீதியில் போவோர், வருவோரைத் தாக்கியும் தவறான சொற்பிரயோகங்களைப் பிரயோகித்தும் அட்டகாசம் புரிந்ததுடன் கமலாசிணி பாடசாலைக்கு அருகில் இயங்கும் தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம்ஒன்றையும் உடைத்து நொருக்கியுள்ளனர்.

இதேவேளை மூன்று தினங்களுக்கு முன் கெருடாவில்லுக்கும், கனகம்புளியடிச் சந்திக்கும் இடையே வயல்வெளிப் பகுதியில் இரண்டு இளைஞர் குழுக்கள் கடும் மோதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவங்களால் இப் பகுதியில் சமூக அமைதிக்கும், கலாசாரத்திற்கும் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக பிரதேச அரசியல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (28)

# தொற்றுநோய் பரவும் அபாயம்

(புதுக்குடியிருப்பு)


மல்லாவி,பாலிநகர் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்களின் பின்பகுதியில் பொலித்தீன், லஞ்சீட்,சொப்பின்பை என்பன வீசப்பட்டு காணப்படுவதால் இதில் மழைநீர் தேங்கி நின்று நுளம்புகள், இலையான்கள் பெருகி தொற்று நோய்கள் ஏற்படவாய்ப்புள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர். (08)

# புதிய கட்டடம் கையளிப்பு

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி நிகொட் அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத் தொகுதியொன்று வைபவ ரீதியாக கையளிக்கப்படவுள்ளது.

நிகொட் அமைப்பின் வட-கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளரான ரி.லங்காநேசன் இப் புதிய கட்டடத்தொகுதியை இன்று பிற்பகல் 4.00 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார். (27)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி மென்பந்து துடுப்பாட்டப் போட்டி



(படம்:- செல்வா)

உள்ளூராட்சி வாரத்தினையொட்டி வலி.தென் மேற்குப் பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட யாழ். மாவட்ட உள்ளூராட்சி அலுவலக உத்தியோகத்தர்களுக்கான மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இச் சுற்றுப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் அணித்தலைவர் ஏ.நித்திலவர்ணன் தனது அணிக்கான வெற்றிக் கேடயத்தினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையாவிடம் இருந்து பெற்றுக் கொள்கிறார்.

# விளக்குப் பொருத்தப்படாத படகில் மீன் பிடிக்கச் செல்லத்தடை

விளக்குப் பொருத்தப்படாத படகுகளில் சென்று தொழிலில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவதுடன், அவர்களது உடமைகளும் பறிமுதல் செய்யப்படும் என தொண்டமனாறு மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

தொண்டமனாறு கடல்நீரேரியில் மீன் பிடிப்பதற்குத் தடை விதித்திருந்த படையினர் அண்மையில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை வழங்கியிருந்தனர். இதற்கமைவாக பலத்த சோதனைக் கெடுபிடிகள் மத்தியில் தொழிலுக்குச் சென்று வரும் மீனவர்கள் மீது புதிய இந்த நடைமுறையைத் திணித்துள்ளனர்.

மேற்படி நீரேரியில் தொழில் செய்யச் செல்லும் மீனவர்கள் இலகுவில் இனங்காணக் கூடியவாறான விளக்குகளை தமது படகுகளில் பொருத்தி இருக்க வேண்டும் எனவும், அவ்வாறு பொருத்தப்பட்டிருக்காத பட்சத்தில் படையினரால் உடனடியாகவே கைது செய்யப்படுவர் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

அதனால் தமது இயல்பான தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இவ்வாறான அச்சுறுத்தல்கள் தொழிலாளிகளிடையே பீதியை உருவாக்கியிருப்பதாகவும் அப்பகுதி மீனவர் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

# அழிவை நோக்கிச் செல்வது மனிதனா? புவியா?

நாம்வாழும் பூமியின் ஆயுட் காலம் தற்போது 4.5 மில்லியன் வருடமாக இருப்பினும் புவியில் மனிதவாழ்க்கை தொடங்கிய காலம் இற்றைக்கு ஒருமில்லியன் வருடங்கள் மட்டுமே. எனினும் மனிதன் இப்புவியில் ஏற்படுத்தும் அழிவுகள் புவிநடுக்கம், சூறாவளி, வெள்ளப்பெருக்கு, எரிமலைக் குமுறல் ஆகியவற்றால் ஏற்படும் அழிவுகளைவிட அதிகமாகும்.




வளைகுடா யுத்தத்தின்போது (குவைத்-ஈரான்-ஈராக்) கனிம எண்ணெய்க்கிணறுகள் அழிவுற்றதால் அதிலிருந்து தோன்றிய காபனீரொட்சைட்டு வாயுவும் மற்றும் அசுத்த வாயுக்களும் மாதக் கணக்கில் வளிமண்டலத்தில் சேர்ந்ததுடன் சிதறுண்டு போன எண்ணெய்படிவுகள் குடாக்கடலில் பரவியது. இதனால் அங்குவாழும் ஆயிரக்கணக்கான கடல்வாழ் உயிரினங்கள் அழிவுக்குள்ளாயின. அதேபோன்று உலகெங்கும் தொடர்ந்து போர்நடைபெற்ற வண்ணமே இருப்பதால் நீர்நிலைகள் யாவும் மாசுபடுவதுடன் அனைத்து நீர்வாழ் உயிரினங்களும் பாரிய அழிவுகளைச் சந்திக்கின்றன. உதாரணமாக றைன்நதி மிகப்பாதிப்புக் குள்ளாகிறது.

இவ்வாறு கடும் விளைவுகள் தோன்றினாலும் இதில் எமது கவனம் மிகக்குறைவே. புவியில் தோன்றும் உயிரினங்களின் வாழ்க்கை வட்டம் ஒருகால எல்லைக்குட்பட்டதாகும். அவற்றின் ஆயுட்காலம் 26 மில்லியன் வருடங்களுக்கு மேற்படாது. மனித இனமும் அவ்வாறே.

65 மில்லியன் வருடங்களுக்கு முன்பு பாரிய கிரகம்(கோள்) ஒன்று வெடித்துச்சிதறியதால் வளி மண்டலத்தில் தூசுமண்டலம் ஒன்று படிந்தது. இதனால் புவிக்கு சூரியஒளி கிடைப்பது தடைப்பட்டதுடன் தாவரங்களும், விலங்குகளும் அழிவைச்சந்தித்தன. புவயிலிருந்துபாரிய விலங்கினமான டைனோசர்களும் அப்போது இறந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அன்று புவியில் வாழ்ந்த 20 வகை உயிரினங்களில் இப்போது எஞ்சியிருப்பவை 4மட்டுமே. இவ்வுயிரினங்கள் அழிவுற்றாலும் புவிமேற்பரப்பு அழியவில்லை அது தானாக அபிவிருத்தியடைந்துள்ளது.

மிசசொயிக் யுகத்தில் மீண்டும் தாவரங்களும் விலங்கினங்களும் வளர்ச்சி கண்டன. சூழலுக்கேற்ப அவை மாற்றமடைந்தன. ஆனால் மனிதனுக்கு அவற்றை அழிப்பது மட்டுமே முடிந்த காரியமாகும். எனினும் புவியின் அமைப்பை அவர்களால் மாற்ற முடியாது. அன்றியும் மனித இனத்தின் வாழ்க்கை வட்டம் 26 மில்லியன் வருடங்கள் எனக் கூறப்படுவதால் இன்றும் 5 1/2 மில்லியன் வருடங்களில் சூரியன் மறைந்துவிட இருப்பதால் மனித இனம் அழிவுக்குள்ளாகும். அது சூரிய வெப்பத்தால் ஏற்படும் ஒன்றாயினும் அதனை மனிதன் தடைசெய்ய முடியாது. மனிதன் தயாரித்த அணுகுண்டின் மூலம் தனக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் அழிவைத் தேடிக் கொள்ள முடியுமே ஒழிய புவிக்கு அழிவைத் தேடித்தர முடியாது. புவிக்கு மனிதனின் உதவி தேவைப் படாது.



மனிதன் அவனின் தேவைக்காக சுத்தமான நீர், காற்று, சுத்தமான வாயு, காலநிலை போன்றவற்றையே பாதுகாத்துக் கொள்ளவேண்டும். எனினும் மனிதன் இவற்றை மாசுபடுத்துவதிலிருந்து இன்னும் விடுபடவில்லை. மனித நடவடிக்கையால் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுதல், காணி அபிவிருத்தி நடவடிக்கைகளால் சூழல் மாசடைதல் என்பன தொடர்ந்த வண்ணமே உள்ளன. அதற்கும் பெருகிவரும் மக்கள் தொகையே காரணம்.




இதனால் உயர் மலைப் பிரதேசங்களிலும் மனிதநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, நில அமைப்புகளில் மாற்றம் ஏற்படுவது மனிதனுக்கே தீமையை ஏற்படுத்துகிறது. அந்நிலங்கள் பயன்பாட்டுத் திறனற்று கைவிடப்படுகிறது. தற்போதைய பரம்பரையினரின் மூதாதையர் வாழ்ந்த 800 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் புவியிருந்த நிலை அண்மைய 200 வருடகாலப்பகுதியில் மாற்றம் கண்டுவருவதால் மனிதனால் புவிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தெளிவாகும்.

# தலையில் உட்காயமா?

## அறிய புதிய கருவி


இங்கிலாந்தில் நியூகேசில் பகுதி விஞ்ஞானிகள் புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அடிபடும் போது தலையில் உட்காயம் ஏற்பட்டுள்ளதா? என்பதை இப்போது ஒரு குறிப்பிட்ட முறை மூலம் கண்டறிகிறார்கள்.



அதாவது அடிபட்டவரின் கண்களில் ஒளியை பாய்ச்சுகிறார்கள். கண்களின் பியூப்பின் என்ற பகுதி அப்போது எவ்வாறு செயற்படுகின்றது என்பதை அறிவதன் மூலம் உட்காயம் பற்றிக் கணக்கிடுகிறார்கள். ஆனால் இந்த முறையானது மிகச் சரியாகப் பாதிப்பைப் பற்றி தெளிவு படுத்துவது இல்லை. எனவே இது தவறான முடிவுகளுக்கும் வழிவகுக்க இடமுண்டு.

இதைத்தவிர்க்க புதியகருவி பயன்படும். இதை அடிபட்டவரின் கண்களில் இருந்து 28 மில்லிமீற்றர் தூரத்தில் வைத்து 1வினாடிக்கும் குறைவான நேரம் பிடித்துக் கொள்ள வேண்டும். அதில் ஒரு டிஜிட்டல் கமரா உண்டு. ஒளி அலை பாய்ச்சலாம். அப்போது கண்களில் ஏற்படும் மாற்றம் பதிவு செய்யப்படும். அதை ஆராய்ந்து உட்காயம் பற்றி ஆராயமுடியும்.

# வளியிலிருந்து நீரை உற்பத்தி செய்யும் சாதனம்



தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி நிலையால் நாடெங்கிலும் குடிநீர் பற்றாக்குறை அதிகரித்துக் காணப்படுகிறது. மக்கள் மழையை எதிர் பார்த்து ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இவ்வாறான வேளையில் குடிநீரை வளியிலிருந்து உற்பத்தி செய்யும் சாதனம் பற்றி செய்தி வெளிவந்துள்ளது. இச்சாதனத்தை இஸ்ரேலியர்கள் தயாரித்துள்ளனர். மின்சாரத்தினால் இயக்கப்படும் இச்சாதனத்தை இயக்கியதும் இயற்கையான வாயு மூலம் பெறப்படும் நீராவியை இவ் இயந்திரம் ஈர்த்து சொற்பநேரத்தில் குடிநீராக மாற்றிவிடும்.


சுமார் 25 லீற்றர் நீரை இச் சாதனம் சேமித்து வைக்கக் கூடியதாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பெறப்பட்ட நீரை வெந்நீராகவோ, குளிர் நீராகவோ மாற்றக்கூடியதாக இச்சாதனம் அமைக்கப்பட்டுள்ளது.

பாலைவனங்களில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினர் குடிநீரைப் பெற்றுக்கொள்ள உதவியாக இது அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வேளை 10 ஆயிரம் லீற்றர் நீரைக்கொள்ளக் கூடிய பெரியசாதனங்களும் இஸ்ரேலில் பயன்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. இக்கருவிகள் சூரியமின் சக்தி மூலம் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

# இரட்டையர்களில் ஒருவரான பெண்ணுக்கு ஒரே சூலில் நான்கு குழந்தைகள்

அமெரிக்காவின் பென்சில் வேனியா,வைன்வுட் பகுதியைச் சேர்ந்த பெண் கீனா மோரிஸ். இரட்டைக் குழந்தைகளில் ஒருவராகப் பிறந்தவர். இப்போது இவருக்கு 33வயது முடிந்து 34 வயது பிறந்துள்ளது.இவரது பிறந்த நாளன்று இவர் 4 குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். அவற்றில் இரண்டு ஆண் குழந்தைகள்; இரண்டு பெண் குழந்தைகள் கடந்த சனவரி மாதம் 2 கரு உயிர்கள் இவரது கர்ப்பப்பையினுள் சிகிச்சை மூலம் வைக்கப்பட்டன. ஒரு குழந்தை பிறக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 4 குழந்தைகள் பிறந்துள்ளன.


## எலிகளுக்கு உடற்பயிற்சி



**அமெரிக்காவில் நேப்ரஸ்கா வெஸ்லியன் பல்கலைக் கழகத்தில் முயல், எலி என்பவற்றிற்கு உடல் உள வலிமையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அவற்றிற்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.**

**இப்பயிற்சிக்காக விசேட முறையில் உபகரணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உயரம் பாய்தல், பளுதூக்குதல், கரணமடித்தல் போன்றவற்றில் இவற்றிற்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.**

# மிக நீளமான வாய்



**டோக்கியோவில் இருந்து 200 கிலோமீற்றர் மேற்கேயுள்ள சியூலுகாரொகை விஞ்ஞான அருங்காட்சியகத்தில் 4.2 மீற்றர் நீளமான மிகப்பெரிய வாயை உடைய சுறாவின் வாயை உற்றுப்பார்க்கும் பிள்ளைகள்.**

# நல்ல வருமானத்தைத் தரக்கூடிய கரட் பயிர்ச் செய்கை

விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைத் தரக்கூடிய பயிர்களில் கரட்டும் ஒன்றாகும். ஏக்கர் ஒன்றிற்கு நல்ல முறையில் பராமரிக்



கப்பட்டிருந்தால் 12-14 தொன் விளைச்சலைப் பெறமுடியும். கரட்டினால் அதிக வருமானத்தை பெறமுடியாது என்ற விவசாயிகளின் அபிப்பிராயம் தவறானது. முறையாக நாம் கரட்டினைப் பயிர் செய்வோமானால் சிறந்த விளைச்சலைப் பெறமுடிவதுடன் நல்ல வருமானத்தையும் பெறலாம்.

* மண்ணும் காலநிலையும்

கரட் பயிர்ச்செய்கைக்கு சேதனப்பசளைகளை அதிகளவாகக் கொண்ட மண் சிறந்தது. இருவாட்டி மண்ணும் உகந்தது- மண்ணில் கற்க்ள் இல்லாதிருப்பது நல்லது. கடல் மட்டத்திலிருந்து 1300மீற்றர் உயரமான இடங்களில் கரட்டை திருப்திகரமாகப் பயிர் செய்யலாம். ஆனால் 1300மீற்றரிற்கு குறைந்த பிரதேசங்களான எமது வன்னிப் பிரதேசத்திலும் பயிரிடக்கூடிய வர்க்கங்கள் உள்ளன.

* நிலம் பண்படுத்தல்

கரட் பயிர்ச்செய்கைக்கு நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். மண்ணைத் தூர்வையாக்க வேண்டும். பின்னர் 1மீ. அகலமான பாத்திகளைத் தயாரித்து கரட் பயிர்ச் செய்கையினை மேற் கொள்ளலாம்.

*இனங்கள்

* ரொப்வெயிட் (4மாதம்):-செம்மஞ்சள் நிறமுடையதும், கூம்பு வடிவிலான வடிவம் கொண்டவை.

* கேப் மார்கரட் (3-3 1/2 மாதம்):- மஞ்சள் நிறமான உருளை வடிவம் கொண்டவை.

* நியு குரோடா (3-3 1/2 மாதம்):- செம்மஞ்சள் நிறமான உருளை வடிவம் கொண்டவை எமது பகுதிகளில் இவ் இனங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

*பயிர்ச்செய்கைக் காலம்

இதனை இரண்டு போகங்களிலும் (சிறுபோகம், காலபோகம்) பயிரிடலாம். ஆனால் நீர்ப்பாசனம் இதற்குப் பிரதான மானது.

கரட்டினை இரண்டு முறைகளில் பயிரிடலாம். 1. விசிறி விதைத்தல் 2.வரிசையில் விதைத்தல். விதைகள் முளைத்து 2-3 கிழமைகளில் நெருக்கமானவற்றை அகற்றி ஐதாக்குவதுடன் 7 ஆவது கிழமை திரும்பவும் ஒரு முறை ஐதாக்கப்படவேண்டும். இவ்வாறு வரிசையில் விதைப்பதால் நாற்றுகளை பராமரிப்பது, ஐதாக்குவது இலகுவாக இருக்கும்.

* பசளைப் பாவனை

கீழ்க்குறிப்பிடும் பசளை வகைகளை தனித்தனியாக பாவிப்பது நல்லது அவற்றின் அளவிடை வருமாறு

| | யூரியா கி/கி | முச்சுப்பர் பொசுபேற்று கி. கி ஏக்கரிற்கு | மியுறியேற்றுப் பொட்டாஸ் கி/கி ஏக்கரிற்கு |
|---|---|---|---|
| அடிப்பசளை | | 110 | |
| 3 ஆவது வாரம் | 45 | | 35 |
| 6 ஆவது வாரம் | 45 | | 35 |
| 9 ஆவது வாரம் | 45 | | 35 |

அடிக்கட்டுப்பசளை

பாத்திகளை தயார் செய்த பின்னர் ஏக்கரொன்றிற்கு 2-3 தொன் கூட்டெருவை இடலாம்.

* நீர்ப்பாசனம்

கரட் செடியின் வேர்ப்பகுதி நீர்ப்பிடிப்பு இருக்கக்கூடியவாறு நீரை ஊற்ற வேண்டும். நீர்ப்பாசனம் குறையும் போது விளைச்சல் குறையலாம்.


* களை நீக்கல்

கைகளால் அல்லது களை நாசினிகளை பாவிப்பதன் மூலம் களைகளைக் கட்டுப்படுத்தலாம். மேற்கட்டுப் பசளைப் பாவனைக்கு முன்னர் களைகளைக் கட்டுப்படுத்துதல் சிறந்தது.

மென்றிமியூசின் (சென்கர்) எனும் களை நாசினியை ஹெக்டேயருக்கு 0.35 கி.கிராம் என்ற அளவில் விதைகளை நடமுன்னர் விசிறுதல் வேண்டும். ஏனைய பயிர்களுடன் பயிர் செய்யும் போது இதனை விசிற வேண்டாம்.

*பீடைக்கட்டுப்பாடு

இலை வெளிறல் பக்றீரியா மென் அழுகல் என்பன பொதுவான நோய்களாகும். பங்கசு நாசினிகளை விசிறுவதன் மூலம் இலை வெளிறல் நோயைக் கட்டுப்படுத்தலாம். அளவிற்கு அதிகமாக நீர்பாய்ச்சுவதால் பக்றீரியா மென் அழுகல் நோய் ஏற்படுகின்றது. எனவே அளவான நீர்ப்பாசனம் மூலம் இதனைத் தவிர்க்கலாம். பல்வேறு சிற்றுண்ணிகள், அழுக்கணவன், கறையான் போன்றவற்றால் ஏற்படும் தாக்கங்களுக்கு



சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினிகளை விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

* அறுவடையும் விளைச்சலும்

கரட் கிழங்கின் மேற்பரப்பு 2.5-5.3 சதுர செ.மீ வரை பெரிதானவுடன் அறுவடை செய்யலாம். அறுவடை செய்யும் போது சேதமடைவதைத் தவிர்க்கவும். சிறப்பாக பராமரிக்கப்பட்ட நிலத்திலிருந்து 30-35 மெற்றிக் தொன் (ஹெக்டேயர் ஒன்றிற்கு), 12-12 மெற்றிக்தொன் (ஏக்கர் ஒன்றிற்கு) விளைவைப் பெறலாம்.

- சி.ஜெயதீபன்

## காணாமற் போன குப்பிளான் நபர் கிளி. இல் உள்ளாரென அறிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

குப்பிளான் வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் ஜெகதீஸ்வரன் (வயது- 30) என்பவர் கோப்பாய்க்குச் சென்ற வேளை காணாமற் போயுள்ளார் என அவரது சகோதரியார் யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிட்டிருந்தார். மேற்படி நபர் கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலையில் தங்கியுள்ளார் என்று வித்தியாலய அதிபர் திரு. இராசேந்திரம் கிளிநொச்சியிலுள்ள வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார். அவரது பெற்றோர் உடனடியாக கிளிநொச்சியிலுள்ள வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (தீ,ச)

## சிறுவர் போசாக்கை மேம்படுத்த "வேள்ட்விஷன்" நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வறுமை நிலையில் வாழும் குடும்பங்களின் சிறுவர்களின் போசாக்கு நிலையினை மேம் படுத்துவதற்காக கிளிநொச்சியிலுள்ள வேள்ட்விஷன் நிறுவத்தினர் ஆடு,மாடு, கோழி போன்றவற்றை வழங்கியுள்ளனர்.



வேள்ட்விஷன் தைவான் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஞானிமடம், அரத்திநகர், வண்ணான்கேணி ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்டு நூறு குடும்பங்களில் முதல்கட்டமாக ஞானிமடத்தில் 25 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் ஆடு, மாடு, கோழி போன்றவற்றை வழங்கினர். வேள்ட்விஷன் கிளிநொச்சி நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஜீ.டீ நைல்ஸ அவர்கள் இவற்றை வழங்கினார். பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (கு)

## திருமலையில் 1983 வன்செயலில் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கான நட்டஈடு ஒழுங்கில்லை

### –சனாதிபதிக்கு துரைரட்ணசிங்கம் பா.உ. கடிதம்

(திருகோணமலை)

1983 ஆம் ஆண்டு வன் செயல்களில் திருகோணமலை மாவட்டத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நட்டஈடு ஒழுங்காக வழங்கப்படவில்லை என்று திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் சனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"நட்டஈடு வழங்கப்பட்டதில் இடம் பெற்ற சீர்கேடுகள் தொடர் பாக எனக்கு முறைப்பாடுகள் வந்துள்ளன. மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உரிய நேரத்தில் நட்டஈடு கோரி விண்ணப்பித்தோருக்கும் நஷ்ர ஈடு வழங்கப்படவில்லை என்றும் காலம் தப்பி விண்ணப்பித்தோருக்கும் மோசமாக பாதிக்கப்படாதவர்களுக்கும் நஷ்ரஈடு வழங்கப்பட்டுள்ளன." என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் சனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஆகக் கூடிய நட்டஈடாக ஒருவருக்கு 150,000 ரூபா வழங்கப் படுகிறது. இந்த நட்டஈடு 1983 வன் செயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒழுங்கான முறையில் வழங்கப் பட்டிருப்பின் அது உதவியாக இருந்திருக்கும். இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு இப்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் அதேதொகையை வழங்குவதால் எதுவித பயனுமில்லை" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ண சிங்கம் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் கிடைத்த வரிசைப்படி 1983 வன்செயலில் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு ஒழுங்கான முறையில் நட்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சனாதிபதியைப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ண சிங்கம் கேட்டுள்ளார். (25)

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள் மூடப்பட்டன

(புதுக்குடியிருப்பு)

மல்லாவியில் சுகாதார சீர் கேட்டுடன் இயங்கி வந்த உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. அத்துடன் பழுதடைந்த உணவுப் பொருட்களும் அழிக்கப்பட்டன.

சென்ற செவ்வாய் மல்லாவி பாலிநகர் பிரதேசங்களில் உள்ள ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள், உணவகம், தேநீர்ச் சாலை, நெல்குற்றும் ஆலை என்பவற்றில் தமிழீழ சுகாதார சேவை- முல்லை மாவட்டத்தினரும், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து நடாத்திய திடீர்ச்சோதனையின் போதே இவ்வாறு உணவகங்கள் மூடப்பட்டன.

உருளைக்கிழங்கு பொதி செய்யப்பட்டு வரும் சாக்கு சிவப்பு எழுத்துப் பொறிக்கப்பட்ட சாயம் அகற்றப்படாமல் சோறு வடிப்பதற்கும் இடியப்பம், பிட்டு அவிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப் பட்டன.

அத்துடன் நோய்க்காவிகளான நுளம்பு, இலையான் பெருக்கத்திற்குக் காரணமான இடமாக இருந்த இரண்டு உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. (08)

### வருடாந்த மகோற்சவம்

வட்டக்கச்சி மாயவனூர் மம்மில் குளக்கரையில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் வருடாந்தப் பெருவிழா வரும் 29 ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 06.09.2004 அன்று தேர்த்திருவிழாவும், மாலை உறியடியும் நடைபெறும். (12)

## பரீட்சைப் பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்ப முடிவுத்திகதி 23

2004 ஏப்ரல் முடிவுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்ப இறுதித்திகதி 23.08.2004 அன்று நிறைவடைகின்றது என முல்லை. மாவட்ட தபாலதிபர் தெரிவித்தார்.

பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு குறித்த தினத்தில் விண்ணப்பங்களை அனுப்பி உதவும் வண்ணம் அவர் கேட்டுக் கொள்கிறார். (20)

# பொருளாதார நெருக்கடி தீராவிடில் வருட இறுதியில் டொலர் 110 ரூபா ஆகும்

## - ஐ.தே.கட்சி எச்சரிக்கை

தற்போதைய வர்த்தக பொருளாதார நெருக்கடிகளை உடனடியாகத் தீர்க்காவிட்டால் டொலரின் பெறுமதி வருட இறுதியில் 110 ரூபா வரை அதிகரித்துவிடுமென ஐக்கியதேசியக்கட்சி எச்சரித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் உட்பட பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அரசு தோல்வி கண்டுள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் பந்துல்லகுணவர்த்தன தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதைத் தொடர்ந்து உள்ளூர் வளங்களின் பெறுமதி 29 கோடி அமெரிக்க டொலர்களால் வீழ்ச்சி அடைந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பொருளாதாரத்தின் இறுதி விளைவு இலங்கை இன்னொரு வடகொரியாவாகவோ, கியூபாவாகவோ மாறுவது தான் எனவும் கூறியுள்ளார்.

# இ. நி. தொடர்பான பேச்சுக்களில் கலந்துகொள்ளப்போவதில்லை!

## ஜே.வி.பி.திட்டவட்டமாக அறிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கான பேச்சுவார்த்தையில் தாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த நடவடிக்கையில் எந்த விதத்திலும் சம்பந்தப்படப் போவதில்லை என்றும் கூறியுள்ளது. ஆயினும் இறுதித் தீர்வு ஒன்றுக்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். உண்மைச் சமாதானத்தின் எதிரிகள் யார் என்ற தலைப்பில் தங்காலையில் கடந்த புதன் மாலை இடம் பெற்றகூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார் வடக்கு, கிழக்கு இணைப்பை நீடிப்பது சட்ட விரோதமானது. அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயாராகி வருகின்றது. சனாதிபதியினால் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த மாகாணங்கள் இரண்டையும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றது என்றும் அவர் குற்றஞ் சாட்டினார். அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த இணைப்பை நீடிக்கும் நடடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாதவேளையில் இவ்வாறான அறிவித்தல்கள் சட்ட விரோதமானது என்று ரில்வின் சில்வா கூறினார்.

# அரசாங்கத்தின் சமாதான யோசனைகள் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்

விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்கம் யோசனைகளை தயாரித்து வருகின்றதா? இல்லையா? என்பதைத் தெளிவுபடுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரவூப்ஹக்கீம் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவின் கருத்தும், மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தும் தெளிவற்ற தன்மையாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். சமாதான செயலகத்தின் பணிப்பாளர் தெரிவித்த கருத்தை ஆதாரமாகக் கொண்டே தான் இந்தக் கேள்வியை எழுப்புவதாக அவர் கூறினார். எனினும், மக்கள் விடுதலை முன்னணி அவ்வாறான யோசனைகள் எதுவும் தயாரிக்கப்படவில்லை என்று கூறுகின்றது. இதில் எது உண்மை என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் வாய்மூலம் கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார். இதற்குப் பதிலளித்த ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஐக்கிய தேசியக் கட்சிகள் உட்பட சில கட்சிகள் அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பி வருவதாகக் கூறினார். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விருதுவழங்கும் நிகழ்வில் ஊடகவியலாளருக்கு அவமதிப்பு

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 26 சரசவிய திரைப்பட விருது வழங்கும் நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்கு உரிய ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நிகழ்வை செய்தியாக்கச் சென்றிருந்த சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று உட்பட உள்ளூர் ஊடகங்களின் செய்தியாளர்கள் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர். நிகழ்விற்கு சனாதிபதி வருவதாகக் கூறி ஊடகவியலாளர்கள் குறிப்பிட்ட இடம் ஒன்றுக்கு மாலை 4.30இற்கு அழைக்கபட்டிருந்தனர்.

எனினும் 5.15 மணி அளவில் சனாதிபதி நிகழ்வுக்கு வரவில்லை என்பதால் விருது வழங்கும் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு ஊடகவியலாளர்கள் நேரடியாக செல்ல முடியும் எனக் கூறப்பட்டது. இதனையடுத்து ஊடகவியலாளர்கள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்குச் சென்ற போதும் அவர்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் ஊடகவியலாளர்கள் ஏனைய இருக்கைகளில் அமர்ந்த போதும் விருந்தினர் வந்ததன் பின்னர் அதிலிருந்தும் அவர்கள் எழுந்து செல்லப் பணிக்கப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கலாசார அமைச்சரைத் தொடர்பு கொண்ட போதும் அது பயனளிக்கவில்லை. இதேவேளை சனாதிபதி பங்குகொள்ளாத போதும் இந் நிகழ்வில் பிரதமர் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# அம்பாந்தோட்டை நீதிவான் மீது நீதிமன்றில் பிரதிவாதி தாக்குதல்

அம்பாந்தோட்டை நீதிவான் மீது பிரதிவாதி ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. சட்ட விரோத ஆயுதங்கள் வைத்திருந்தமை தொடர்பில் குறிப்பிட்ட பிரதிவாதியை நேற்று முன்தினம் கைதிக் கூண்டில் வைத்து விசாரணை நடைபெற்ற போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றது. இரண்டு மூன்று தடவைகள் குறிப்பிட்ட கைதியின் விசாரணை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் விசாரணை நடை பெற்ற போது கைதி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த பொதியைக் கொண்டு நீதிவான் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனையடுத்து நீதிவான்களின பாதுகாப்புத் தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளருடன் கலந்தாலோசனை நடத்துமாறு அம்பாந்தோட்டை நீதிவான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதுடன் கைதியை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் (32)

# ஐந்து ஏவுகணைகளை வைத்திருந்தோரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

சிலாபத்தில் 5 தன்னியக்கி ஏவுகணைகள் மீட்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இவர்கள் இருவரும் கடந்த புதன் கைது செய்யப்பட்டனர். நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து விபத்துக்குள்ளான மிக் ரக வானூர்தியில இருந்த 5 ஏவுகணைகளை குறிப்பிட்ட இருவரும் மீட்டு தமது வீட்டு வளவில் புதைத்து வைத்தமை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த ஏவுகணைகளை இவர்கள் காவல்துறையினிடம் கையளிக் காமல் புதைத்து வைத்திருந்தனர் எனபது குறித்து சிறிலங்கா காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (32)


# பணிநிலை வெற்றிடம்

## க.வ.ப.நோ.கூ.சங்கம், பரந்தன்

01. பதவி :- பிரதம எழுதுநர்

சம்பளக்குறியீட்டு இல. :- 302/10

சம்பள அளவுத்திட்டம். :- (4750-100X10 - 110X10-6850) + (1250/=)

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர்/கணக்குப் பதிவாளர் பதவியில் இரண்டு (02) வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் மேற் குறிப்பிட்ட பதவிகளில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது,

ஆ. ஐக்கிய இராச்சிய நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தலுடன் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

இ. கூட்டுறவுப் புணியாளர் உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த. (உ/த) மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தலுடன் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் குறிப்பிட்ட பதவியில் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 21-45

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

02. பதவி :- காசாளர்

சம்பளக்குறியீட்டு இல. :- 306/11

சம்பள அளவுத்திட்டம் :- (4500-90X10 - 100X10-6400) + (1250/=)

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டத்தில் காசாளர்/வியாபாரத்துறையில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 13ஆவது சம்பளத்திட்டத்தில் சம பதவிகளில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது,

ஆ. கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி (உ/த) சித்தி அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் 03 பாடங்கள் சித்தியுடன், கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் காசாளர்/வியாபாரத்துறையில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 21 - 45

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

03. பதவி :- அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர்.

சம்பளக்குறியீட்டு இல. :- 201/10

சம்பள அளவுத்திட்டம் :- (4750-100X10 - 110X10-6850) + (1250/=)

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்டத்தில் அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது ,

கூட்டுறவுப்பணியாளர் 12ஆவது சம்பளத்திட்டத்தில் அதே பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது,

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகவும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கூட்டுறவுச் சமூக அபிவிருத்தி சம்பந்தமான துறையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*குறிப்பு:-* குறிப்பிட்ட 03 பதவிகளுக்கும கணினி அறிவும், திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம்,
பரந்தன்.

(சி-9793)

# ஜம்மு காஷ்மீரில் மோதல் 3 தீவிரவாதிகள் உட்பட 6பேர் பலி

(சிறிநகர்)

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினரின் முகாம்கள் மற்றும் வேறுசில இடங்களில் நடந்த சண்டையில் 2படையினர், 3 தீவிர வாதிகள் உட்பட 6பேர் கொல்லப் பட்டனர். குப்வ்ரா மாவட்டத்தில் வியாழக்கிழமை நடந்த தேடுதல் வேட்டையில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அப்போது நடந்த சண்டையில் இராணுவவீரர் இராமன் தீப்சிங் சுட்டுக்கொல்லப் பட்டார். பாரமுல்லா மாவட்டத்தில் பந்திபோரா பகுதியில் பாதுகாப்பு ரோந்து வாகனம் மீது மறைந் திருந்த தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதலை நடத்தினர். இதில் இராணுவ ஜவான் குந்தன் சிங் கொல்லப்பட்டார். இதே மாவட் டத்தில் தீவிரவாதிகளுக்கிடையே நடந்த மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார். சிறிநகரில் பொலிசிற்குத் தகவலளிப்பவர் எனக் கூறப்படும் முகம்மது அல்டாப்பட் என்பவர் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண் டிருந்தபோது தீவிரவாதிகள் அவரைச் சுட்டுக்கொன்றனர்.

சிறிநகரில் புதன்கிழமை இரவு சி.ஆர்.பி.எவ்.முகாம் மீது தீவிரவாதிகள் துப்பாக்கி மூலம் எறியும் குண்டுகளை வீசினர். இதில் 2ஜவான்கள் காயமடைந் தனர். குப்வாரா மாவட்டத்தில் பாதுகாப்புப் படைமுகாம்மீது தீவிரவாதிகள் மூன்று எறிகணை களை வீசினர். இந்தச் சம்பவத் தில் உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. பாராமுல்லா மாவட்டத்தில் காட் டுப்பகுதியில் தேடுதல் வேட்டை யில் ஈடுபட்டிருந்த சந்தர் மோகன் சிங் என்ற படைவீரர் குண்டு வெடித்துக் காயமடைந்தார்.

# தேர்தல் ஆணையத்தின் கடிதத்திற்கு நடைப்பயணம் நிறைவில் பதில்

## ம.தி.மு.க. தலைவர் வை.கோ.

(திருச்சி)

ம.தி.மு.க அங்கீகாரத்தை ஏன் இரத்துச் செய்யக்கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் கடிதத் திற்கு நடைப்பயணம் முடிந்த பிறகு பதிலளிப்போம் என்றார் அக்கட்சியின் பொதுச் செயலர் வைகோ. திருச்சியில் வியாழக் கிழமை இரவு மறுமலர்ச்சி நடைப்பயணத்தை மேற்கொண்ட அவர் இவ்வாறு .தெரிவித்தார். புதுக்கோட்டையிலிருந்து திருச்சி வந்த அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையப் பகுதிக்கு வந்தபோது பயணத்தை மேற் கொண்டபடியே செய்தியாளர் களிடம் அவர் கூறியது, "தேர்தல் ஆணையம் அனுப்பிய கடிதத்தில் பதிலளிக்கத்தக்க சான்றுகள் ம.தி.மு.க.விடம் உள்ளன. இது பற்றிய தகவலைப் பிறகு தெரி விப்பேன்" என்றார்.

வியாழக்கிழமை மதியம் பிரதமர் மன்மோகன்சிங் தொலை பேசிமூலம் என்னுடன் தொடர்பு கொண்டு, நடைப்பயணத்திற்கு வாழ்த்துத் தெரிவித்தார் எனவும், நடைப்பயணத்தில் இதுவரை 400 கிலோமீற்றர் தொலைவைக் கடந்துள்ளேன் எனவும் வை.கோ. கூறினார்.

# பீகாரில் தீவிரவாதிகள் தாக்குதல் அரசியல்வாதிகள் நால்வர் பலி

(பாட்னா)

பீகார் மாநிலம், பாட்னா மாவட்டம் பாலிகஞ்ச் பஜார் பகுதியில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நான்கு நிர்வாகிகளை மக்கள் போர்ப்படை இயக்கத் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். இத்தகவலைப் பொலிசார் வியாழக்கிழமை தெரிவித்தனர்.பாலிகஞ்ச் பஜாரிலுள்ள மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி அலுவலகத்துக்குள் புதன்கிழமை நள்ளிரவு பயங்கர ஆயுதங்களுடன் மக்கள் போர்ப்படைத் தீவிரவாதிகள் நுளைந்தனர். அங்கு தங்கியிருந்த கட்சி நிர்வாகிகள் மீது சரமாரியாகச் சுட்டனர். இதில் நான்குபேர் அந்த இடத்திலேயே இறந்தனர். அந்தக் கட்சியின் தொண்டர் ஒருவரையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.இதே பகுதியில் மக்கள்போர்ப்படையைச் சேர்ந்த இருவராக ஓகஸ்ட் 14ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டதற்குப் பழிதீர்க்கும் வகையில் மக்கள் போர்ப்படை இயக்கம் மேற்படி தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

# ஈராக்கில் கடத்தப்பட்ட இந்தியர்களை மீட்க பிணைத்தொகை கொடுக்கப்படவில்லை

## - மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

ஈராக்கில்லொறி ஓட்டுநர்களாகப் பணியாற்றிய அந்தரியமி, திலக் ராஜ், சுக்தேவ்சிங் ஆகிய இந்தியர் களை கடந்த யூலை 21ஆம் திகதி ஈராக் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர் அல்லவா?. அவர்கள் இதுவரை மீட்கப்படவில்லை.

இது குறித்துப் பிரதமர் மன்மோகன்சிங் மாநிலங்கள வையில் நேற்றுக் கூறியதாவது,

ஈராக்கில் 3 இந்தியர்கள் தீவிரவாதிகளின் கையில் சிக்கித் தவிப்பதை மத்திய அரசு மிக முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் மூவரையும் கூடிய விரைவில் பத்திரமாக மீட்க மத்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.எனக் கூறினார்.

இதே பிரச்சினை குறித்து மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அகமது கூறியதாவது

3இந்தியர்களையும் மீட்கும் பிரச்சினை தொடர்பாக ஈராக் தீவிரவாதிகளுடன் மத்திய அரசு நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தாது

கடந்த 1990 ஆம் ஆண்டு காந்தகார் விமானக் கடத்தல் காஷ மீர் முதல்வர் முப்தி முகமதுவின் மகள் ரபியாசைக் கடத்தல் ஆகிய சம்பவங்களைத் தொடர் ந்து தீவிரவாதிகளுடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்துவது இல்லை என்று மத்திய அரசு முடிவு எடுத்தது.

அதன்படி தற்போதைய பிரச்சி னையிலும் தீவிரவாதிகளுடன் மத்திய அரசு நேரடிப்பேச்சுவார்த்தை நடத்தாது மேலும் இந்தியப் பிணைக கைதிகளை மீட்கப் பணயத் தொகையும் வழங்கப்படமாட்டாது. மாறாக மூன்று இந்தியர்களும் பணியாற்றிய குவைத் நிறுவனம் மூலம் தீவரவாதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி அவர்களைப் பத்திரமாக மீட்க மத்தியரசு தேவை யான அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொண்டுள்ளது. விரைவில் மூன்று இந்தியர்களும் மீட்கப்படுவரென மன்மோகன்சிங் மேலும் தெரிவித்தார்.

# வழக்கறிஞர்கள் போராட்டத்தைக் கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு முன்வர வேண்டும்

## மத்திய சட்டத்துறை அமைச்சர்

தமிழக வழக்கறிஞர்கள் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கை விட்டுப் பேச்சுவார்த்தையின் மூலம் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டும் என்று மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் வெங்கடபதி கூறியுள்ளார். சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய சட்டத்துறை இணை அமைச்சர் வேலை நிறுத்தம் செய்வதற்கு வழக்கறிஞர்களுக்கு உரிமை இல்லை என்று கூறமுடியாது. என்றாலும் வேலை நிறுத்தத்தில் அவர் கள் தொடர்ந்தும் ஈடுபடுவது பொதுமக்களுக்கும், நீதிமன்றத்துக்கும், வழக்கறிஞர் சங்கத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் கருத்திற் கொண்டு வழக்கறிஞர்கள் பொறுமையுடன் நடந்து கொள்ளவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.


## திறப்பு விழா அழைப்பிதழ்

பூநகரி வாழ் மக்களின் நன்மை கருதி

"திரைப்பட வெளியீட்டுப் பிரிவு தொடர்பகம்"

21.08.2004 இன்று மு.பகல் 11.00 மணிக்கு பூநகரி வாடியடிச் சந்திக்கரு காமையில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தரு கின்றோம்.

நிர்வாகம்,
திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழம்.

(4980)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 ★ 05 ★ 1943 | 22 ★ 07 ★ 2004 |

(அமரர்) பிரபல சோதிடர்

### சின்னத்தம்பி கந்தசாமி

(காரை எஸ்.கே.சாமி சாஸ்திரியார் சிறிகிருஷ்ணானந்த ஜோதி நிலையம், மதுஷா வீதி, தேராவில்)

அன்பின் தெய்வமே ஆருயிரே அப்பாவே!
ஊனின்றி உறக்கமின்றி இரவு பகல் பாராது எமக்கெல்லாம்
உலகமாய் நின்றீர்கள்-அப்பா உங்கள் உயிரின்றி
உதவிய கையின்றித் தவிக்கின்றோம் ஓடோடி வந்திடுங்கள்!
மறுபிறப்பிலும் எம் அன்புத் தந்தையாக!

(21.08.2004) இன்று நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்:-
விமலானந்தன் ஜவர்னா
தேராவில், உடையார்கட்டு.

(4981)





# எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி 2004
# சீனா- அமெரிக்கா கடும் போட்டி

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கப் பட்டியலில் ஐக்கிய அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

நேற்று மாலை வரை அமெரிக்கா 14 தங்கம், 11 வெள்ளி, 10 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 35பதங்கங்களைப் பெற்றிருந்தது.


இதன் மூலம் சீனா இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

தற்போது தடகளப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளதால் அமெரிக்காவின் ஆதிக்கம் மேலும் வலுவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.


16 வயதுடைய அமெரிக்க வீராங்கனை காலிஸ்பற்றர்சன் ஜிம்னாஸ்ரிக் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றதன் மூலம் பதக்கப்பட்டியலில் அமெரிக்காவை முதலிடத்திற்குக் கொண்டு வந்தார்.

தனிநபர் ஜிம்னாஸ்ரிக் போட்டிகளில் சகல துறை பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்ததன் மூலம் அவர் அமெரிக்காவின் ஒட்டு மொத்த தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கையை 14 ஆக அதிகரித்தார். இந்தப் போட்டி நிகழ்ச்சியில், 20 வருடங்களின் முன்னர் அமெரிக்கா தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத் தக்கது. இதே வேளை நள்ளிரவு தகவல்களின் படி அமெரிக்கா, சீனா பதக்கப்பட்டியலில் சம நிலையில் இருந்தன.




ஆண்களுக்கான இரட்டையர் மேசைப்பந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் ஹொங்கொங்கை சேர்ந்த டிமிற்றிக் மசுநோவ், அலெக்சி சிமிர்நோ ஆகியோர் வெற்றியை கொண்டாடுகின்றனர்.



பெலாறஸ்சைச் சேர்ந்த இவன்திக்கொன் ஆண்களுக்கான சம்மட்டியெறிதல் தகுதிப் போட்டியில் சம்மட்டியை எறிகின்றார்.

## எதென்ஸ் ஹொக்கிப் போட்டி, அரையிறுதிக்கு நெதர்லாந்து

ஆண்கள் ஹொக்கி போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டமொன்றில் பாகிஸ்தான் - தென்கொரியா அணிகள் மோதின. இதில் பாகிஸ்தான் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மற்றொரு ஆட்டத்தில் நெதர்லாந்து தென்னாபிரிக்கா அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

இதில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நெதர்லாந்து. 3 வெற்றியை பெற்றுள்ள நெதர்லாந்து அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.






ஆர்ஜென்ரீனா வெற்றியீட்டியதை கொண்டாடும் வீராங்கனைகள்

## துருப்புச்சீட்டாக அப்ரிடி
### பாப் உல்மர்

3 நாடுகள் போட்டியில் பாகிஸ்தானின் துருப்பு சீட்டாக அப்ரிடி இருப்பார் என்று பாகிஸ்தான் பயிற்சியாளர் பாப் உல்மர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3நாட்கள் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்துள்ள அதிரடி ஆட்டக் காரர் அப்ரிடி அதிரடியாக அடித்து ஆடுவதில் கில்லாடி ஆவார்.

அப்ரிடிக்கு எப்படி ஆடவேண்டும் என்பது நன்றாக தெரியும். இந்தியாவுக்கு எதிராக பல சாதனைகளை படைத்துள்ள அப்ரிடி 3 நாடுகள் போட்டியின் பாகிஸ்தான் அணிக்கு துருப்பு சீட்டாக இருப்பார் என உல்மா நம்பிக்கை தெரிவித்தார்.


## போதைமருந்து பிடியில் சிக்கினார் இந்திய வீராங்கனை பிரதிமாகுமாரி



இந்திய பளு தூக்கும் வீராங்கனை பிரதிமாகுமாரி போதைமருந்து சோதனையில் சிக்கினார். இந்தியாவின் பளுதூக்கும் வீராங்கனைகளில் ஒருவர் பிரதிமாகுமாரி ஒலிம்பிக் போட்டியில் 63 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொள்வதாக இருந்த பிரதிமாகுமாரி இடுப்புவலி காரணமாக போட்டியில் இருந்து விலகியதாகக் கூறப்பட்டது. ஆனாலும் பிரதிமாகுமாரி போட்டியில் இருந்து விலகியதற்கு காரணம் இடுப்புவலி அல்ல என்று தற்போது தெரியவந்துள்ளது.



பெண்களுக்கான வோட்டர்ப் போலோ போட்டியில் (தண்ணீரில் முழ்கித் தடியினால் பந்தடிக்கும் போட்டி) இத்தாலிய அணித் தலைவி காமெலா அலூசி (இடம்) கசகஸ்தான் அணித் தலைவி அசெஜகஜ்வாவின் தலைக்கு மேலால் நீந்துகின்றார்.



அமெரிக்க ஆரன்பியெசெல் 200 மீற்றர் பிற்புறக்கையசைவு நீச்சற் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதைக் கொண்டாடுகின்றார்.

## பயஸ் - பூபதி ஜோடி அதிர்ச்சித் தோல்வி தங்கப்பதக்க வாய்ப்புத் தகர்ந்தது

டெனிஸ் போட்டியின் ஆண்கள் இரட்டையர்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா வின் லியான்டர் பயஸ் - மகேஸ் பூபதி ஜோடி ஜேர்மனி ஜோடியிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. இதனால் தங்கப்பதக்கம் பெறும் கனவு தகர்ந்தது. ஆட்டத்தின் தொடக்கம் முதலே ஜேர்மனி ஜோடி ஆதிக்கம் செலுத்தி ஆடியது. இந்திய ஜோடி வழக்கத்திற்கு மாறாக தடுமாற்றத்துடன் ஆடியது. இதனை நன்கு பயன்படுத்திக் கொண்ட ஜேர்மனி ஜோடி முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் எளிதாகத் தனதாக்கிக் கொண்டது.

2ஆவது செட்டில் பயஸ்-பூபதி ஜோடி சுதாகரித்துக் கொண்டு ஆடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக ஜேர்மனி ஜோடியின் ஆதிக்கமே அதிகமாக இருந்தது. இதனால் 2ஆவது செட்டையும் கெய்வர்-ஷட்லர் ஜோடி 6-3 என்ற கணக்கில் கைப்பற்றியது.



ஆண்களுக்கான இரட்டையர் படகோட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கத்தை வெற்றி பெற செக்குடியரசைச் சேர்ந்த ஒன்றெச்ஸ்ரீபனெக் (வலது) ஜறோசலவ் வோல்வ் ஆகியோர் துடுப்பை வலிக்கின்றனர்.

## மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டி
## இந்தியா- பாகிஸ்தான் இன்று பலப்பரீட்சை

3 நாடுகள் கிரிக்கெட்போட்டி நெதர்லாந்தில் இன்று தொடங்குகிறது. இதன் முதல் ஆட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகள் இடையேயான கிரிக்கெட்போட்டி இன்று முதல் 28ஆம் திகதி வரை நெதர்லாந்தில் நடக்கிறது. இந்தப் போட்டியில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒருமுறை மோதும். இதில் புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்தும். இன்று நடக்கும் முதல் ஆட்டத்தில் இந்தியா, பரமஎதிரி அணியான பாகிஸ் தானை எதிர் கொள்கிறது.



பெண்களுக்கான தனிநபர் உடற்பயிற்சிப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த காலிபற்றர்சன் முன்னால் தங்கப்பதக்கததுடன்,



பெண்களுக்கான 50மீற்றர் மூன்று நிலைகளில் துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற ரஷ்யாவைச் சேர்ந்த லியோபோவ் கல்கினா தனது தங்கப் பதக்கத்தைக் காட்டுகின்றார்.

### இறுதி டெஸ்ட் போட்டி
## இங்கிலாந்து வலுவான நிலையில் தடுமாறும் மேற்கிந்தியத்தீவு




இங்கிலாந்திற்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவு அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சிற்காக 470 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

311 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்திருந்த இங்கிலாந்து அணி இரண்டாம் நாளான நேற்று 470 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடும் மேற்கிந்திய தீவு மதியபோசன இடைவேளைக்கு முன்னர் 38 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிக்கொண்டிருந்தது.

நடந்து முடிந்த மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பரபரப்பான ஒருநாள் போட்டியில் சிறிலங்காவிற்கு 3விக்கெட் வெற்றி




தென்னாபிரிக்கா சிறிலங்கா அணிகளுக் கிடையில் நேற்று கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள போட்டியில் சிறிலங்கா 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பகல் இரவாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய தென்னாபிரிக்கா 9 விக்கெட்டை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. கலிஸ் 74 ஓட்டங்களையும் மார்க் பௌச்சர் 63 ஓட்டங்களையும் பெற்றனர். வாஸ 4 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்.

சிறிலங்கா 49ஆவது ஓவரில் 6 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அத்தப்பத்து 64 ஓட்டங்களையும்,குணவர்த்தன 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நிற்றினி 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக சமிந்தவாஸ் தெரிவானார். ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் வெற்றி பெற்றதன் மூலம் சிறிலங்கா அணி 1-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கின்றது.

## சிந்தனைக்கு



சிங்கள பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப் போவதில்லை.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-08-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## சமாதானத்தின் விரோதிகள் யார்!

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு பிரதான கட்சிகள் உட்பட பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் சில கட்சிகளும் முயன்று வருவதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டே புள்ளே பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் இவர் யாரைக் குறிப்பிடுகின்றார்? எக்கட்சியைக் குற்றம் சாட்ட முனைகின்றார்?

பிரதான கட்சிகள் என்ற ரீதியில் தமது பரம வைரியான ஐ.தே. கட்சியை வழமை போல ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குற்றஞ்சாட்ட வாய்ப்புண்டு. ஆனால் ஐ.தே.கட்சியோ சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தன்னால் இயன்ற ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளதாகப் பல தடவை கூறியுள்ளது. சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவித்தாலும், சுதந்திரக்கட்சிக்குத் தாம் ஆதரவு வழங்கத் தயார் என ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

ஆகையினால் சமாதான முயற்சிகளுக்கு ஐ.தே கட்சி எதிராகச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு பொருத்தப்பாடானதாகக் கொள்வதற்கில்லை. சில வேளைகளில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று அதில் ஒரு தீர்வு எட்டப்படும் வேளையிலோ, அன்றி அமுல் செய்யப்படும் வேளையிலோ ஐ.தே.கட்சி இதற்கு எதிராகச் செயற்படலாம். இது தற்பொழுது எதிர்வு கூறுவதற்கான விடயமல்ல.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஐ.தே. கட்சி சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்படுகின்றது எனக் குறைகூறுவதோ, அன்றிக் குற்றம் சாட்டுவதோ பொருத்தப்பாடானதல்ல. ஒரு வகையில் அது பழக்கதோசத்தின் அடிப்படையிலான குற்றச்சாட்டாகவே இருக்க முடியும்.

இதற்கு அடுத்ததாக எதிர்க்கட்சிகள் என்ற ரீதியில் ஜாதிக ஹெல உறுமய சமாதான முயற்சிகளை தீவிரமாக எதிர்த்து வரும் கட்சியாகவுள்ளது. இது சிலவேளைகளில் ஆட்சியாளர்களுக்குச் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தடைக்கல்லாக இருத்தல் கூடும். ஆனால் இத்தடைகளைத் தாண்டிச்செல்ல, அதாவது ஜாதிக ஹெல உறுமயவின் எதிர்ப்பையும் மீறி சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கப் பலமான சக்திகள் பாராளுமன்றத்தில் உண்டு.

அதாவது அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பட்சத்தில் ஜாதிகஹெல உறுமயவின் எதிர்ப்பையும் மீறி அரசாங்கம் இவ்விடயத்தில் (சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில்) பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாய்ப்புக்கள் கூட உண்டு.

ஆகையினால் சமாதான முயற்சிகள் சில கட்சிகளால் குழப்பப்படுகின்றன என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சுமத்துவாரேயானால் அது தவறானதாகும். அவ்வாறு இல்லாது சில கட்சிகள் என்பது ஆளும் கட்சிக்கூட்டணிக்குள் இருப்போரையும் குறிப்பிடுமானால் அது பொருத்தப்பாடுடையதாக இருக்கும்.

ஏனெனில் இன்று சமாதானத்தின் விரோதிகளாகத் தம்மை வெளிப்படுத்திக்கொள்பவர்களும், சமாதான முயற்சிகளுக்கெதிராகத் தீவிரசெயற்பாட்டில் ஈடுபட்டவர்களாகவும் இருப்பவர்கள் ஜே.வி.பி யினரே. இவர்கள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குத் தமது தீவிர எதிர்ப்பைத் தெரிவித்து வருவதோடு, வடக்கு கிழக்கு இணைப்பு என்பதற்கும் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

தமது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவாரேயானால் ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறி விடுவோம் எனவும் பகிரங்கமாக மிரட்டியும் வருகின்றனர். இன்றைய சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகா விரும்பினாலென்ன, விரும்பாது விட்டாலென்ன சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக்கூடிய பலம் அவரிடம் இல்லை.

இந்நிலையில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சில கட்சிகள் சமாதான முயற்சிகளைக் குழப்புகின்றன எனக்குறிப்பிட்டது ஜே.வி.பியையே சார வேண்டியது. இதைவிடுத்து எதிர்த்தரப்பில் குறிப்பாக ஐ.தே கட்சியையோ, அன்றி ஜாதிகஹெல உறுமயவையோ குறிப்பிட்டிருப்பாரேயானால் அவர் யதார்த்தத்தைக் காண அஞ்சுகின்றார் என்றே கொள்ள வேண்டும். ஏனெனில் இன்று ஆட்சியாளர்கள் வெற்றிகொள்ள முடியாத சமாதானத்தின் விரோதிகளாக ஜே.வி.பி யினரே உள்ளனர்.

# பேருந்துக் கட்டணங்களை உயர்த்தாவிடில் ஓகஸ்ட் 30 முதல் தொடர் வேலை நிறுத்தம்

### நேற்றைய பேச்சுக்களும் இணக்கமின்றி முடிவு

(கொழும்பு)

தனியார் பேருந்துக் கட்டணத்தில் ஆகக் குறைந்த கட்டணமாக மூன்று ரூபாவை நான்கு ரூபாவாக அதிகரிக்கா விட்டால் வரும்30ஆம் திகதி முதல் நாடு தழுவிய பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

தனியார் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்குமாறு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க போக்குவரத்து அமைச்சிற்கும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்திற்கும் இடையில் நடந்த பேச்சுக்களை அடுத்து புதிய பேருந்து கட்டணம் அறிவிக்கப் பட்டது.

இதில் ஆகக்குறைந்த கட்டணமாக மூன்று ரூபா மாற்றப்பட வில்லை. இதனை ஆட்சேபித்து எதிர்த்ததை அடுத்து புதிய கட்டண அறிவிப்பு வரும் 25ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பதில் தருவதாக பிரதிப் போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதில் ஆக்கபூர்வமான பதில் கிடைக்காவிட்டால் வரும் 30ஆம் திகதி முதல் நாடு தழுவிய பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தாங்கள் கட்டணம் எதனையும் அறவிடப் போவதில்லை யெனவும் தனியார் பேருந்துக் கட்டணம் தொடர்பாக தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்படவேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

# பொருளாதாரக் கொள்கையில் ஸ்திரமின்மை பொருட்களின் விலை மேலும் உயரும்

### முன்னாள் பிரதிநிதியமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

டிசம்பர் மாதம் முடிவடைவதற்குள் ஒரு டொலரின் விலை ரூபா 110 ஆக அதிகரிக்கும் எனவும், ஆனபடியால் தற்பொழுதுள்ள விலைகள் மூன்று மடங்காக அதிகரிக்கும் என முன்னாள் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திடம் ஸ்திரமான பொருளாதாரக் கொள்கைகள் இல்லாத படியால் இப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. மீண்டும் நாட்டில் அரிசி, மிளகாய் போன்றவைகள் குறிப்பிட்ட தொகைக்கு மேல் கொண்டு செல்ல முடியாது என சட்டம் கொண்டு வருவதற்கு தற்பொழுது அரசு பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதாக பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

# பால்மா வகைகளின் விலைகளும் சிறிலங்கா அரசினால் அதிகரிப்பு!

(கொழும்பு)

பால்மாக்களின் விலைகள் அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்று என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது

அதன் அடிப்படையிலேயே தாம் பால்மாக்களின் விலைகளை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் உயர்த்த அனுமதி அளித்ததாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் அங்கர் 400 கிராம் மாவின் விலை 131 ரூபாவில் இருந்து 142 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது

அங்கர் ஒரு கிலோவின் விலை 323 ரூபா 75 சதத்தில் இருந்து 347 ரூபாவாகஅதிகரிக்கப் பட்டுள்ளது

ரத்தி 400 கிராமின் விலை 117 ரூபா 50 சதத்தில் இருந்து 126 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.அந்த பால்மாவின் ஒரு கிலோவின் விலை 305 ரூபாவில் இருந்து 333ஆக உயர்த்தப்பட்டுள்ளது

ரெட் கௌ 400கிராமின் ன் விலை 137 ரூபாவில் இருந்து 148 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது

அதேநேரம் ரெட் கௌவின் ஒரு கிலோ பொதியின் விலை 335 ரூபாவில் இருந்து 366 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது

நெஸ்பிறே 400 கிராமின் விலை 131 ரூபாவில் இருந்து 136 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ள அதேநேரம் நெஸ்பிறே ஒரு கிலோவின் விலை 323 ரூபா 70 சதத்தில் இருந்து 332 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது (32)

### பெண் சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

எழுதுமட்டுவாள் இராணுவ முகாமைச் சேர்ந்த பெண் இராணுவச் சிப்பாய் ஒருவர் கடந்த 18 ஆம் திகதி இரவு 9.00மணியளவில் தன்னைத் தான் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்துள்ளார். இறந்தவரின் பெயர் தர்சிகா எனவும், இறந்ததற்கான காரணங்கள் எதுவும் தெரியவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# 'பாபுல்' இறக்குமதியை நிறுத்தப் பரிந்துரை

(கொழும்பு)

பாபுல் இறக்குமதியை நிறுத்துமாறு போதைவஸ்து தடுப்புப் பிரிவு அரசாங்கத்திடம் பரிந்துரைத்துள்ளது

பாபுலில் அடங்கியுள்ள போதையையூட்டும் தன்மையானது இலங்கையில் மாணவர்கள் மத்தியில் பாரிய பாதிப்பைக் கொண்டுவந்துள்ளது

எனவே அதனைத் தடுத்து நிறுத்தவது அவசியமானது என போதைவஸ்து தடுப்புப் பிரிவு கூறியுள்ளது.இதேவேளை பல்வேறு இடங்களில் இருந்தும் விற்பனைக்கு வந்துள்ள பாக்குகள் தொடர்பாக அரசாங்க பகுப்பாய்வு அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். (32)

# சனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற பின் 617 கொலைகள்!

### ஐக்கிய தேசியக் கட்சி சாடுகிறது

(கொழும்பு)

சனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற பின்னர் நாட்டில் 617 கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது

இதே காலப்பகுதியில் 417 ஆட்கடத்தல் சம்பவங்களும்,817 பாலியல் வல்லுறவு சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

519 ஆட்கடத்தல்கள்,8 ஆயிரத்து 414 வீடு உடைப்புச் சம்பவங்களும் இதில் அடங்கும் என அவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார் இந்த நிலை மக்கள் மத்தியில் பாதுகாப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# கலாசார சீரழிவில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## கலாசாரம் பேணும் குழு எச்சரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் கலாசாரச் சீர்கேடுகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக்கலாசாரத்தைப் பேணும் அமைப்பு தெரிவித்துள்ளது.

தென்மராட்சியில் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில், ஒழுங்கைகளில், மக்கள் அற்ற வீடுகளில் இத்தகைய பாலியல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது இனிவரும் நாட்களில் கடும் நடவடிக்கையை கலாசாரத்தைப் பேணும் அமைப்பு மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கிறது.

பல இடங்களில் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டோர் கையும், மெய்யுமாய் பிடிபட்டுள்ளதாகவும், அவர்களை எச்சரிக்கை செய்து விட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் சங்கத்தானைப் பகுதியில் உள்ள கோயிலுக்கு அருகில் வைத்து கலாசார சீர்கேட்டில் ஈடுபட முயன்ற இருவர் பிடிக்கப்பட்டு கடும் எச்சரிக்கை செய்யப்பட்டபின் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இனிமேல் இப்படியான நடவடிக்கையில் ஈடுபடும் சில இளைஞர், யுவதிகளால் எம் சமூகத்தின் கலாசாரம் பங்கப்படுவதை அனுமதிக்க முடியாதென்றும், அதற்கெதிராய் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதென்ஸ் ஒலிம்பிக் - 2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 17 | 12 | 11 | 40 |
| சீனா | 15 | 11 | 10 | 36 |
| ஜப்பான் | 12 | 04 | 03 | 19 |
| அவுஸ்திரேலியா | 08 | 05 | 08 | 21 |
| ரஷ்யா | 05 | 11 | 12 | 28 |
| இத்தாலி | 05 | 06 | 03 | 14 |
| ஜேர்மனி | 05 | 05 | 09 | 19 |
| பிரான்ஸ் | 05 | 05 | 06 | 16 |
| உக்ரேன் | 05 | 01 | 02 | 08 |
| தென்கொரியா | 04 | 08 | 03 | 15 |
| துருக்கி | 03 | 00 | 01 | 04 |
| நெதர்லாந்து | 02 | 05 | 05 | 12 |
| ஹங்கேரி | 02 | 03 | 01 | 06 |
| சிலோவாக்கியா | 02 | 02 | 01 | 05 |
| ருமேனியா | 02 | 00 | 02 | 04 |
| தாய்லாந்து | 02 | 00 | 02 | 04 |
| கிறீஸ் | 02 | 00 | 01 | 03 |
| பிரிட்டன் | 01 | 04 | 04 | 09 |
| போலந்து | 01 | 02 | 01 | 04 |
| பெலாறஸ் | 01 | 01 | 03 | 05 |
| தென்னாபிரிக்கா | 01 | 01 | 01 | 03 |
| சிம்பாவே | 01 | 01 | 01 | 03 |
| ஜோர்ஜியா | 01 | 01 | 00 | 02 |
| பல்கேரியா | 01 | 00 | 02 | 03 |
| சுவிற்சர்லாந்து | 01 | 00 | 01 | 02 |
| ஐக்கிய அரபு எமிரேன் | 01 | 00 | 00 | 01 |
| ஆஸ்திரியா | 00 | 03 | 00 | 03 |
| கியூபா | 00 | 02 | 05 | 07 |
| வடகொரியா | 00 | 02 | 01 | 03 |
| ஸ்பெயின் | 00 | 02 | 00 | 02 |

# ஒஸ்லோவில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பேரினவாதிகள் கூட்டிய மாநாடு பிசுபிசுப்பு

(ஒஸ்லோ)

தீவிர பௌத்த சிங்கள அடிப்படைவாதிகள்நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிராகப் பெரும் முஸ்தீப்புடன் கூட்டிய மாநாடு பிசுபிசுத்துப் போனது.

இம் மாநாட்டைக் கூட்டுவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த நோர்வே நாட்டவர் ஒரு கொலைகாரர் என்பதும் இம் மாநாடு பிசுபிசுத்துப் போகக் காரணமாகும்.

இந்த மாநாட்டைஒஸ்லோவில் ஒழுங்கு செய்வதற்கு ஒத்துழைத்த நோர்வே நாட்டைச் சேர்ந்தவர் 1997ஆம் ஆண்டில் வெளிநாட்டவர் ஒருவரைக் கொலை செய்த கொலைகாரர் என்றும் மூளைப் பிசகு என்ற காரணத்தைக் காட்டி குறைந்த பட்சத்தண்டனை அனுபவித்து வரும் வேளை இந்த மாநாட்டை ஒழுங்கு செய்வதற்கு வேலை செய்திருக்கிறார் என்பதான திடுக்கிடும் தகவலை "ஊத்றூப்" எனப்படும் நோர்வே மொழியிலான இணையத்தளம் வெளிக்கொணர்ந்ததை மேற்கோள் காட்டி தமிழ்இணையம் செய்தி வெளியிட்டிருந்தது.

சுமார் 10 நோர்வேஜியர்களே கலந்து கொண்டதாகவும் இவர்களிலும் ஒரு சிலர் மாநாடு நடக்கும் வேளையே எழுந்து சென்று விட்டதாகவும் மாநாடு பிசுபிசுத்துப் போய்விட்டதாகவும் ஒஸ்லோவில் இருந்து கிடைக்கும் இறுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மாநாட்டிற்கு சனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி உள்ளிட்ட சிங்களப் பேரினவாத சக்திகளும் சில ஊடகங்களும் பின்னணியில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வரிமன்னிப்பு பிரேரணையை மீளத்திருத்த சனாதிபதி உயர்நீதிமன்றிடம் ஆலோசனை

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிமுகப்படுத்திய வர்த்தகர்களுக்கான வரிமன்னிப்பு பிரேரணையை மீள் திருத்தம் செய்வது தொடர்பில் சனாதிபதி உயர்நீதிமன்றத்தில் சட்ட வலுவைக் கோரியுள்ளார்.

2003ஆம் ஆண்டு அக்டோபர் 10 திகதி அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய வருமான சட்டமூலத்தின் காரணமாக பெருமளவு வரி வருமானம் அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போக வாய்ப்புள்ளதாக அரசாங்கம் கூறுகிறது எனவே அதனை சீர்திருத்த வேண்டும் என அது முன்பிருந்தே தெரிவித்து வந்தது.

அதனடிப்படையிலேயே அந்த பிரேரணையை மாற்றுவதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளது. இந்த நிலையில் உயர்நீதிமன்றத்தின் அனுமதி கிடைத்தால் அது பாராளுமன்ற விவாதத்துக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என கருதப் படுகிறது எனினும் ஐக்கிய தேசியக் கட்சி இந்த பிரேரணை மூலம் தேங்கியுள்ள பெருமளவு வரிப்பணத்தை பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புனரமைக்க வேண்டுகை

ஒட்டு சுட்டானில் இருந்து நெடுங்கேணி செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக அபிவிருத்தியின்றி குன்றும் குழியுமாக உள்ளது. இவ் வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ளது. இதனால் இவ் வீதியால் பயணிக்கும் பொது மக்கள் பல துன்பங்களை எதிர்கொள்கின்றனர். (ஆ)

# கைதடி முதியோர் இல்ல புதிய விடுதி திறப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்ல புதிய விடுதி, அரச சிறுவர் இல்ல புதிய கட்டடம் ஆகியவற்றின் திறப்பு விழா நேற்றுக்காலை முதியோர் இல்ல அத்தியட்சகர் கே.வி சிவனேசன் தலைமையில் நடைபெற்றது.

முதியோர் இல்ல புதிய விடுதியினை சாவகச்சேரி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசன் திறந்து வைத்தார். சிறுவர் இல்ல புதிய கட்டடத்தினை திருமதி ரஞ்சினி நடராஜப்பிள்ளை (பணிப்பாளர் சமூக நலத்துறைத் திணைக்களம், வடக்கு,கிழக்கு மாகாணம்-திருகோணமலை) திறந்து வைத்தார். (செ)

## இளைஞன்...

வந்துள்ளனர். குறித்த இளைஞனைக் கைது செய்து யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கியதாக உயர்பொலிஸ் அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

## விடுதலை....

மேலும் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் படையினரின் கண்முன்னே தாக்குதல் இடம் பெற்றுள்ளதும் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகப்படையினர் தெரிவித்துள்ளமையும் சந்தேகங்களை மேலும் வலுவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமணத்தின்....

தனது வீட்டிலிருந்து மணமகளின் வீட்டிற்கு உந்துருளியில் சென்று கொண்டிருந்த போது அவரை திடீரென வழிமறித்த இனந்தெரியாத கும்பல் ஒன்று மணமகனை வெட்டிக் கொன்றுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை தனது காதலிக்கும் வேறொருவருக்கும் நேற்று நடைபெறவிருந்த திருமணத்தைக் குழப்புவதற்காக சம்பந்தப்பட்ட மணப்பெண்ணின் காதலனால் இக்கொலை நடத்தப்பட்டிருக்கலாமென பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர் .(33,27)

## சமாதான....

தூதுவர் ஜெ.ீ.ரி லான்ஸ்ரற் ஆகியோர் தெரிவித்துள்ளனர். படுகொலைகள் மற்றும் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மற்றும் மீண்டும் மீண்டும் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள விமர்சன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார். அரசாங்கத்துடன் பேச்சுக்களில் கலந்துகொள்வது தொடர்பாக விடுதலைப் புலிகள் சாதகமான பதிலை வழங்க வேண்டும். யுத்த நிறுத்தம் மற்றும் சமாதானப் பேச்சுக்களில் மீள பங்குபெறுதல் என்பன இலங்கையின் எதிர்கால சமாதானம், முன்னேற்றம், ஒருமைப்பாடு என்பனவற்றுக்கான வாய்ப்பை உருவாக்கும். அத்துடன் அமெரிக்கா இலங்கையில் மீள்கட்டுமானப் பணிகளுக்கு உதவி வழங்கத் தயாராகவுள்ளது. எனினும், சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் பட்சத்திலேயே இது சாத்தியப்படும் என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ....

பட்டுள்ள போதும் இதுவரை அவர்கள் நீதிமன்றில் ஆஜராகவில்லை. ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகவுள்ள நிலையில் குறித்த படை அதிகாரிகள் எவருமே ஆஜராகியிராமை காணாமல் போனோரது பாதுகாவலரிடையே சோர்வை உண்டாக்கியுள்ளது.

இதேவேளை குறித்த படை அதிகாரிகளுக்கு யாழ். மேல் நீதிமன்றம் மற்றும் சாவகச்சேரி,யாழ். நீதவான்,நீதிமன்றங்களும் அழைப்பாணைகளை யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரூடாக அனுப்பி வைத்திருந்த போதிலும் இதுவரை எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

இந்நிலையிலேயே எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். மேல் நீதிமன்றில் இடம்பெறவுள்ள ஆட்கொணர்வு மனு ஒன்றின் மீதான விசாரணையின் போது குறித்த சந்தேக நபரான படை அதிகாரியை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கோரும் மனுவொன்றைத்தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தரப்பில், நீதிமன்றங்களில் ஆஜராகிவரும் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி எம்.ரெமீடியஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இழுபட்டுச்செல்லும் வழக்கு விசாரணைகளால் எனது தரப்புக்கள் சோர்வுற்றுள்ளன. இவ்வாறு நீளும்வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து எதிர்கொள்ளும் பொருளாதார வசதியும் அற்ற நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

இந் நிலையில் சந்தேக நபர்களான படை அதிகாரிகள் ஆஜராகாததைக் காரணம் காட்டி விசாரணைகள் இழுபடுவது அனுமதிக்க முடியாது. இதனாலேயே முதற்கட்டமாக கொடிகாமம் பகுதியில் இளைஞர் ஒருவர் காணாமல் போன சம்பவத்தில் முதலாம் எதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள படை அதிகாரி லெப்.கேணல் கே.மகிந்தர்ட்ணவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தக் கோரவுள்ளோம்" என்றார்.(27,)

## குளிக்கச்....

எனினும் படையினரால் கடலினுள் விரிக்கப்பட்டிருக்கும் முட்கம்பிகளுக்கிடையே சிக்குண்டே குறித்த இளைஞன் இறந்ததாக ஒருசாராரும், புதைசகதியினுள் சிக்குண்டேஇறந்ததாக மற்றொரு தகவலும் தெரிவிக்கின்றது. (27)

## சனாதிபதியின்...

தமிழ்மாணவர்களையும், மக்களையும் அழித்தொழிப்பதில் முனைப்புக்காட்டி வந்த அராஜகவாதியான சிறிலங்கா சனாதிபதியின் படம் தமிழர் பிரதேசத்திலுள்ள யாழ்.பல்கலைக் கழகத்தில் வைத்து மதிப்பளிக்கப்படுவதை அனுமதிக்கமுடியாது எனவும் இதனால் யாழ்.பல்கலைக்கழக அலுவலகங்கள் மண்டபங்களில் பொருத்தப்பட்டுள்ள சனாதிபதியினது படங்கள் அகற்றப்படல் வேண்டும் எனவும் பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரை ஏற்கனவே கோரியிருந்தனர்.

எனினும் பல்கலை மாணவர்களது கோரிக்கைகள் துணைவேந்தராலும், நிர்வாகத்தினராலும் கவனத்தில் எடுக்கப்படாததையடுத்து ஆத்திரமடைந்த மாணவர்கள் நேற்று காலை 10.00 மணியளவில் ஒன்று கூடி பல்கலைக்கழக மண்டபங்கள் அலுவலகங்களில் பொருத்தப்பட்டிருந்த சனாதிபதியின் படங்களை அப்புறப்படுத்தினார். (33)

## அரசியல்....

முடியாதது என அவர் குறிப்பிட்டுள்ளார்

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள செவ்வியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது எவரும் கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப்புலிகளை சந்திக்க முடிந்தது

தற்சமயம் அரசாங்க சமாதான செயலர் கூட வடக்கு கிழக்குக்கு செல்ல ஐரோப்பிய நாடுகளின் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அனுமதியைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை ஜே.வி.பி.யி.ன் பிரசாரசெயலரும் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவித்துள்ள ராஜித சேனாரட்ண, தாம் ஆட்சியில் இருந்த போது மணிராசகுளம் பற்றி பேசிய ஜே.வி.பி இன்று கருத்து எதனையும் கூறாமல் இருந்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.